1876-ம் வருஷம் ஆரம்பிக்கப்பட்டது

Telegrams: "CATHOLIC PRESS" JAFFNA.

Telephone: NO. 100

# சத்தியவேத பாதுகாவலன்

" கர்த்தர் நகரத்தைக் காக்காவிட்டால் அதைக் காக்கிறவன் கண்விழிப்பது வியர்த்தம் "

78-ம் புத்தகம் 26-ம் இல. யாழ்ப்பாணம் 1953-ம் ஆண்டு ஆடிமாதம் 9-ந்திகதி வியாழக்கிழமை—பிரதிசதம் 10

## போர் நிறுத்தம் ஏற்படுமா ?

ரீ. சீனிவாசன்

கோறியாப்போர் தொடங்கி மூன்றுஆண்டுகள் முடிந்துவிட்டன. போர்நிறுத்தப்பேச்சுகள் தொடங்கி ஈராண்டுகள் முடியப்போகின்றன. போர்நிறுத்தம் நிறைவேறாது முக்கிய முட்டுக்கட்டையாயிருந்தது, கைதிகளின் கதியைப்பற்றிய விவாதம். சாதாரணமாகக் கைதிகள் தத்தம் நாட்டுக்குத் திரும்பிச்செல்வது வழக்கம். ஆனால், இந்தப் போரின் விந்தை என்னவெனில், வடகோறியா, சீனநாடுகளின்கைதிகள் அநேகர்[மொத்தம் 1,32,000 கைதிகளில் 48,000 பேர்வரை] தங்கள் சொந்தநாட்டுக்குத் திரும்ப மறுக்கின்றனர். பலாத்காரமாகத் திருப்பி அனுப்பமுயன்றால் எதிர்த்துப் போர்செய்வதாகவும் இவர்கள் அறிவித்தனர்.

கம்யூனிஸ்த நாடுகளிலே அரசியலில மாறுபாடான கருத்து உள்ளவர்களை அரசாளுபவர்கள் துன்புறுத்துவது உலகறிந்த விஷயம். ஆகையால், கம்யூனிஸ்தர்களிடம் இந்தக்கைதிகளை மீண்டும் ஒப்புவிப்பது சரியல்லவென்று அமெரிக்கர்பிடிவாதம் பண்ணினது காருண்ணியமான காரியம். இதற்கெதிராக ரூஷியரும், சீனரும் சர்வதேசசட்டத்தை மேற்கோளாகக் காட்டித் தங்கள்கைதிகளைத் தங்கள் வசம் ஒப்புவிக்கவேண்டுமெனக் கோரினர். இருகட்சிக்கும் சமரசமாக இந்தியப்பிரதிநிதிகள்ஒருதிட்டத்தை எடுத்துக்கூறினர். இத்திட்டத்தை அமெரிக்கர் முதலில்நிராகரித்தனர். பின்னர் ஆதரித்தனர். ஆனால், சீனஅரசினர் அதை ஏற்றுக்கொள்ள மறுத்தனர்.

### காற்று மாறிவீசுகிறது

இப்பொழுது அவர்களாகவே இந்தியதிட்டத்தைப்போலும்ஒரு திட்டத்தை ஒப்புக்கொண்டுள்ளனர். இவ்வாறு ஏற்பட்ட மனமாறுதலுக்குக் காரணமென்னவென்று கேட்டுப் பயனில்லை. ஸ்ராலினின் மறைவுக்குப்பின் கம்யூனிஸ்தநாடுகளில் காற்றுத் திசைமாறி வீசுகிறதுஎன்பது மட்டும் நிச்சயம். கிழக்குஜேர்மனியிலே கம்யூனிஸ்தஅரசினர் தமதுகொள்கையில் சற்று விட்டுக்கொடுத்துள்ளனர். எனினும், கிழக்குப்பேர்லினில்பெரிய கலகம்நிகழ்ந்துளது. எல்லாவற்றிற்கும் மேலாக ரிற்றோவும், ரூஷியர்களும் ஐந்தாண்டுகளுக்குமுன் முறிந்துபோன அரசியல் தொடர்பைத் திரும்ப அமைத்துக்கொண்டு ஸ்தானிகர்களைப் பரிமாறிக்கொண்டுள்ளார்கள். முதலாவதாகச் சீனர்கள் தங்கள்தீவிரத்தைச் சற்றுக் குறைத்துக் கொள்வதாகத் தோன்றுகிறது. இந்தோசீனாவிலே லாவோஸ்நாட்டில் வேகமாக முன்னேறிச்சென்ற வியெற்மின்படைகள் பின்வாங்கியுள்ளன. முக்கியமாகக்கோறியப்போரால் சீனருக்கு நிரந்தரமான நன்மைஎதுவும் ஏற்படப் போவதில்லை. அமெரிக்கரும், சீனரும்போராடுவதால் ரூஷியர்களே பலனடைகிறார்கள். இதை அறிந்ததாலும், அமெரிக்கஜனாதிபதி ஐஸன்ஹாவரின் தீரத்தைக்கண்டதாலும சீனர்கள் தளர்ச்சியுற்றிருக்கலாம்.

### கைதிகளின் கதி

இது எவ்வாறாயினும் கைதிகளின்பிரச்சினைக்கு இப்பொழுது முடிவுஏற்பட்டுவிட்டது. அதாவது போர்நிறுத்தம் ஏற்பட்டதும் தத்தம்நாட்டுக்குத் திரும்பிச்செல்லமறுக்கும் கைதிகள் அனைவரும் நடுநிலைமை வகிக்கும் ஐந்துநாடுகளைக் கொண்ட ஓர் கமிஷனின் பொறுப்பில் எடுத்துக்கொள்ளப் படுவார்கள். இவ்வைந்துநாடுகளாவன: இந்தியா, சுவீடன், சுவிற்சர்லாந்து, போலாந்து, செக்கோசிலவாகியாஎன்பன. இவைகளின் மேற்பார்வையிலே கைதிகளின் தாய்நாட்டைச்சேர்ந்த உத்தியோகஸ்தர்கள் கைதிகளை அணுகி அவர்கள் தங்கள்நாடு திரும்புமாறு தீர்மானிப்பதற்கானகாரணங்களை எடுத்துரைப்பார்கள். இவ்வாறு தொண்ணூறுநாள் சென்றதும் தத்தம் நாடு திரும்பிச்செல்ல மறுக்கும் கைதிகள் இந்தநடுநிலைமைக் கமிஷனின் முழுப்பொறுப்பிலே எடுத்துக்கொள்ளப் படுவார்கள். அதற்கப்பால்கூடும் 'அரசியல் மகாநாடு' முப்பது நாட்களுக்குள் இந்தக்கைதிகளின் கதியை முடிவுசெய்யக்கடவது. அந்தக் காலத்தவணை கடந்தபின் எஞ்

(தொடர்ச்சி 8-ம் பக்கம்)

## ஜெருசலேமும் ரோமைநகரும்

S. Nicholas, O. M. I.

தமிழாக்கம் ஆசிரியர் வி. பி. மரியாம்பிள்ளை

சீயோன் தனது அரசரும், இரட்சகருமாகிய கிறீஸ்துநாதரை அவரது சதிகாரச் சத்துராதிகளுக்குக் காட்டிக்கொடுத்துச் சொல்லொணாத் துன்பத்திற்குள்ளாகியது, சரித்திரவாயிலாகச் சகலருமறிந்ததே. ரோமைச் சக்கராதிபத்தியம் தனது சேனாபலத்தைக்கொண்டுசெய்த படுபயங்கரமான பழிபாதகங்களும், குரூரத்தனமான அக்கிரமங்களும் இம்மட்டன்று. ஆயினும், எலலாம் வல்லஇறைவன் அவற்றில் ஒன்று முற்றாய் அழிந்து இருந்தவிடமுந் தெரியாது மண்ணோடுமண்ணாய்மறைந்துபோகவும், மற்றது மாற்றார் கைப்பட்டு வீழ்ச்சியடைந்து, பின்னர் புத்துயிர்பெற்று முன்னொருபோதும் இருந்திராத பான்மையாய்ச் சிறப்புற்றோங்கவும்வேண்டுமெனத் திருவுளமானார்.

ஜெருசலேம் எங்கள் ஆண்டவராகிய கிறீஸ்துபெருமானின் தாயகமாய் இருந்தபோதிலும், அந்நகரம் அவரை முற்றாகவே ஏற்றுக்கொள்ளவில்லை. அற்பமேனும் அவரைத் தன்னகத்திற்தங்க அனுமதியளிக்கவில்லை. அவரது திருவாக்குகளுக்குச் சிறிதுமே செவிசாயாது அவைகளைநகைத்துத் தள்ளிவிட்டது. அன்றியும் அவரது திருநாமத்தினால் அனுப்பப்பட்ட போதகர்களையும், தீர்க்கதரிசிகளையும் கல்லால்எறிந்து, கணக்கில்லாத உபாதைகள்புரிந்து கொன்றுவிட்டது.

எல்லாவற்றிற்கும் மேலாக உந்நதத்திலிருந்து சர்வேசுரனாலே தெரியப்பட்ட தேவப்பிரசைகள்மத்தியில் உதித்த தேவகுமாரனாகிய உலகமீட்பரின் உதிரம் கடைசித்துளிபரியந்தம் அந்தஜெருசலேம் நகரிலேயே பலியாக்கப்பட்டது. அனாதியாயுள்ளதேவன் ஆவலுடன் தமக்கெனத்தெரிந்தெடுத்த பாலுந் தேனும்பொழியும் புண்ணியபூமியே இரக்கமில்லாத ஓநாய் போன்று அவரின் திருஇரத்தத்தைப் பலியெடுக்கத்துணிந்தது. அறிவில்லாத விலங்குகள் தானும்செய்யத்துணியாத இந்த ஈனச்செயலே ஜெருசலேமின் வீழ்ச்சிக்கு வித்தாயிற்று.

சகல நன்மைச் சுரூபியான சர்வேசுரனை ஏற்றுக்கொள்ள மறுத்த அப்பட்டணம் அவராலே கைவிடப்பட்டு மேய்ப்பனில்லாத மந்தைபோலும், அரசனில்லாத பிரசைபோலும், தாய் இல்லாப் பிள்ளைபோலும் ஆருமில்லாத அனாதையாயிற்று. தனது வனப்பும், வளமுங்குன்றி வானரங்கள் முதலாய் வசிக்கத்துணியாத வனாந்தரமாயிற்று. சகல தேசங்களாலும் இகழப்பட்டு, சகலசாதி சனங்களாலும் ஒதுக்கப்பட்டு, மதிப்பிழந்து மறைந்த நிலையிலேயே இன்னும் இருந்துவருகின்றது. தேவனின் கோபநீதி இதுவேயாகும். அவரது தீர்ப்பைமாற்ற அன்றேல் அதற்குத்தப்பி யொளிக்க ஒருபோதுமே முடியாது.

அன்றியும் மிகப்பெரும், புகழும்பெற்றுவிளங்கிய அலங்காரமிக்க ஜெருசலேம் தேவாலயமும் தகர்க்கப்பட்டு, பலிபீடங்கள்இடிக்கப்பட்டுப் பாழடைந்த பரிதாபநிலைமையில் காணப்படுவதானது கடவுளின் சாபத்தீட்டையே கண்கூடாக் காண்பிக்கின்றது. புராதனப்பெருமை வாய்ந்த — சரித்திரப் பெருமை சாலநிறைந்த சலமோன் அரசராலே அகிலஉலகமும்வியக்கும் படியாகக் கட்டியெழுப்பிய இந்தமகாலயம் இப்போது தவிடுபொடியாகி, தரைமட்டமாய்க்கிடப்பதானது, ஆண்டவனின் இணையில்லா ஆஞ்ஞைக்கு ஓர் அழியாச்சான்றாகும்என்க.

இங்ஙனம் பலவாறாக என்னுள்ளத்தில் எண்ணியெண்ணிப் பெரிதும் ஏக்கங்கொண்டு, கண்களைக் கையாற்பொத்தியபடி பட்டப்பகலிலே, இருந்த இடத்திலே, என்னையேமறந்து கண்ணயரலானேன். சிறிது நேரத்துளெல்லாம் ஆகாய மார்க்கமாகப் பறந்துபோவது போல் உணர்ந்தேன். பழைய பாபிலோனிய பட்டணத்தைத் தாண்டிச் சீசர்கள் ஆட்சி செய்துள்ளசீரியசீமையெனப் பெயர் பெற்றதும், புதியபாபிலோனெனத் தேவனால் அமைக்கப்படவிருப்பதுமான ரோமை மாநகரின் எல்லையைச் சென்

(தொடர்ச்சி 4-ம் பக்கம்)

# துன்பதுயரம் இன்பத்தின் பாதை

"வருத்தப்பட்டுப் பாரஞ்சுமக்கிறவர்களே! நம்மண்டைவாருங்கள்; நாம் உங்களுக்கு ஆறுதல் உண்டுபண்ணுவோம். நமது சிலுவையின் நுகத்தடியை நாளாந்தம்சுமந்து என்பிறகே வாருங்கள், அது இன்பமும், இலேசானதுமாயிருக்கும்" என்கிறூர் நமது இரட்சகர்.

"ஒருவன் எனக்கு ஊழியம்செய்தால் என்னைப் பின்பற்றக்கடவான். நான் எங்கே இருக்கிறேனே அங்கே என் ஊழியனும் இருப்பான். ஒருவன் எனக்கு ஊழியம்செய்தால் என்பிதா அவனைக் கனப்படுத்துகிறூர்" என்கிறூர் நமது யேசுஇரட்சகர்.

நமதுஇரட்சகர் பிறந்தது மாட்டுக்கொட்டில். வளர்ந்தது தச்சர்வீட்டில். சீவித்தது வறுமையில். 'அவர் நம்மைப்போல் ஊண்உடையில் இடாம்பீகம் நாடினூரா? வாழ்க்கையில் சொகுசுதேடினூரா? வசித்திருக்க மாடமாளிகை கட்டினூரா? நரிகளுக்குப் பொந்துகள்உண்டு, பட்சிகளுக்குக் கூடுகள்உண்டு; ஆனுல், மனுமகனுக்கோ தலைசாய்க்கக் கல்லுத்தானுமில்லை" என்று அவர்கூறினூரல்லவா?

நாம் தினமும் பரம அன்னையை வணங்கிப்போற்றிவரும் வாடாமாலையாகிய செபமாலையின் வியாகுலகாரணிக்கத்தில் தியானிப்பது என்ன? இரட்சகரின் பூங்காவனப்பிடைகளும், யூதராலே அவர் பிடிபட்டு, அடிபட்டு, முண்முடிசூட்டப்பட்டு, பாரச்சிலுவை தோளிற்சுமத்தப்பட்டு, தொய்வோடே நடத்தப்பட்டு, சிலுவையில் அறையப்பட்டு உயிர்விட்டதைப்பற்றிஅல்லவா? இவைகளை நாம்உணர்ந்து நமக்குவரும் துன்பதுயரங்களை முறுமுறுக்காமல் நன்மனதோடு — தேவசித்தத்திற்குப் பணிந்தமனதோடு ஏற்றுக்கொள்ளுகிறேமா? நமது பாவங்களுக்காக இத்துன்பதுரிதங்கள்மூலம் பரிகரிப்புச் செய்ய மனங்கொள்ளுகின்றேமா?

தேவதாயார் சென்மமாசின்றி உற்பவித்திருந்தும், வரப்பிரசாதங்களால் பூரணமாக நிறைந்திருந்தும் நமது இரட்சகர் தமது தாயார் மட்டில் நடந்துகொண்ட விதமென்ன? பெத்தலேமில் தங்கவீடுஇல்லை. செல்லுமிடமெல்லாம் ஆதரிப்பாரில்லை. அவரின் திருப்பத்தா ஓர் தச்சுத்தொழிலாளி. சீவித்தவீடு ஓர்குடிசை. சீவியமோ அன்றுடன்று கைத்தொழில் செய்து. கபிரிகேல்தேவதூதன் மங்களவார்த்தைகூறிய நேரந்தொட்டு உயிர்பிரிகிறமட்டும் அவ அனுபவித்தது துன்பமும் துயரமுமல்லவா?

தேவாலயத்தில் தேவபாலகனைக் காணிக்கைகொடுத்தபோது அடைந்த பேறென்ன? தீர்க்கதரிசியான சிமியோன் அவவைப்பார்த்து, உம்முடைய ஆத்துமத்தை வியாகுலவாள் ஊடுருவும் என்பதே. அப்போதுதானே மானிட இரட்சணியத்திற்கான வியாகுலவாழ்வு தொடங்கியதென்னலாம். கல்வாரிமலையிலே அவவின்திருமகனூர் சிலுவையில் தொங்கும்போது அவ அனுபவித்த வியாகுலத்துக்கு எல்லை உண்டா?

பழைய ஏற்பாட்டிலே. யோபு என்னும் மகாத்துமாவைப்பற்றிக் கூறப்படுவதென்ன? ஆண்டவரின் அனுமதியோடு பிசாசு உயிரைமாத்திரம்விட்டு அவருடைய ஆஸ்திபாஸ்தி, மனைவிமக்கள், பொருள்பண்டம்யாவையும் அழிக்கவில்லையா? அவருக்குக் குஷ்டரோகம்வருவித்து அவர் தனதுசிநேகிதராலுமே கைவிடப்பட்டு வருந்தியபோது யாதுகூறினூர்? "கர்த்தர் தந்தார், கர்த்தர் எடுத்துக்கொண்டார், அவர்நாமம் அர்ச்சிக்கப்படுவதாக" என்று கர்த்தரைப் புகழ்ந்தாரல்லவா? துன்பத்தின்பிறகு இன்பம்என்றபடி முன்னிலும் பன்மடங்காக அவர் ஆசீர்வதிக்கப்பட்டார்.

பரகதிசேர்ந்தவர்களிலே சென்மமாசின்றிப்பிறந்த தேவதாயார், ஸ்நாபகஅருளப்பராயினும்சரி, வேறுஎந்த அர்ச்சியசிஷ்டர்களாயினும் சரி, வேதசாட்சிகளாயினும்சரி "பாடின்றிப் பரலோகபட்டம் பெறவில்லை." மூவிதஆசைகளை அடக்கியாண்டு, உலகம், சரீரம், பிசாசுஎன்னும் சத்துராதிகளைவென்று, அரும்பெருந்தியாகங்கள்செய்து உத்தம யேசுவின் தொண்டராய் முத்திநெறிபெற்றவர்களில் எத்தனையோபேர் பட்டம்பதவிகளை வெறுத்தனர். துறவுபூண்டனர். கசைவார்களினூல் தங்களை அடித்தனர். துன்பதுயரம் அனுபவித்தனர். காடுவனம்நாடிச்சென்று கடுந்தபம் புரிந்தனர். ஐஸ்வரியங்களைஎல்லாம் அறவேதுறந்தனர். காரணம்என்ன? அழியாத மோட்சமுடியைப் பெறலாம் என்பதைநன்குகண்டுகொண்டமையே.

இன்றையஉலகில் சீவந்தராய்இருப்பாருள் எத்தனையோபேர் நாளாந்தம் யேசுபெருமானைப்பற்றி வறுமை, பொறுமை, தற்பரித்தியாகம், பிறர்சிநேகம், அமைச்சல்முதலிய புண்ணியங்களை அனுசரித்துவருவதை நாம்காணவில்லையா? ஐஸ்வரியவான் மோட்சம் போவது ஊசியின்காதில் ஒட்டகம் நுழைவதுபோலிருக்கும் என்பதை நன்குஉணர்ந்த எத்தனையோ ஆயிரவர் ஐஸ்வரியத்தைப் புறக்கணிக்கவில்லையா? அர்ச். பிரான்சீஸ்சவேரியார் ஸ்பானியதேசத்திலே பிரபுக்கள் வம்சத்தில்பிறந்தாலும், "ஒருவன் உலகமுழுவதையும் ஆதாயமாக்கிக்கொண்டாலும் தனதுஆத்துமத்தை இழப்பானேயாகில் அவனுக்குவரும் இலாபம்என்ன?" என்றசுவிசேஷவாக்கை நினைவுகூர்ந்து, துறவறம்பூண்டு, ஆத்துமஇரட்சணிய ஆவல்கொண்டு, அல்லும்பகலும் அயராதுழைத்தபோது அனுபவித்த துன்பதுயரம் இம்மட்டென்று சொல்லவியலுமா?

A. M. குலாஸ்,

ஆசிரியர் — வங்காலை

பாத்திமாபதியிலே பரம அன்னை பாலர்மூவர்க்கு அளித்த காட்சியின் போது தபசினூல் உடலைவாட்டுவதும், பரித்தியாகமும் யேசுவை அதிகம்பிரியப்படுத்துகின்றனஎன்றும், மனிதர் ஈடேறச் செபம், தபம் அத்தியாவசியம் என்றும் கூறிப்போந்தா அல்லவா?

பயிர்செய்யும் உழவன் ஒருவன் உழுதுவிதைத்து அறுத்து மிதித்துத் தானியத்தைக் கொண்டுவந்து வீடு சேர்க்கும்வரையும் இராப்பகலாய் எவ்வளவோ கஷ்டபிரயாசையின் பின்னரே விளைவின்சந்தோஷத்தை அனுபவிக்கிறூன்.

மாபிள்கல்லில் வேலைகொள்ளும் சிற்பாசாரிஒருவன் நாள்முழுவதும் உளிசுத்தியல்கொண்டு கைஉளைய உளையக் கொத்துவேலைசெய்து எவ்வளவோ கஷ்டப்பட்டபின்தான் அழகுள்ளசுரூபங்களைக்கண்டு ஆனந்தங்கொள்ளுகிறூன்.

குழந்தையைப்பெறுந் தாயானவள் பத்துமாதம்சுமந்து பத்தியமிருந்து சொல்லொணுப் பிரசவவேதனையின் பின்னர்தான் கண்ணுக்குக்குளிர்ச்சியான, மனதிற்கு மகிழ்ச்சியான பாலகனைக் கண்டடைகின்றூள்.

நாளாந்தம் நமது இல்லங்களிலே சமையல்செய்யும்பெண்கள் தண்ணீர், விறகு, உணவுப் பொருட்களுக்காகக் கஷ்டப்பட்டு அதன்பேறுகவே உருசியான உணவுகளைச் சமைத்துச்சந்தோஷத்துடன் பரிமாறுகின்றூர்கள்.

இவ்விதமாக உலகில் எக்கருமங்களும் பிரயாசத்தின்பேறுகவே பலன் அளிக்க, மறுமையின் இன்பவாழ்வை மாத்திரம் இலேசாய், சொகுசாய்ப் பெறலாம்என்றிருப்பது மதியீனம் அன்றே!



# சுதேச வர்த்தமானம்

## கவர்னர்—ஜெனறல்

கவர்னர்—ஜெனறல் சோல்பறி பிரபு அவர்கள் நாளை 10-ந் திகதி வெள்ளிக்கிழமை கமெற் விமானத்திலே லண்டன்நகர்செல்லவிருக்கின்றூர். இவர்ஓய்விலேஅங்குசென்றபோதிலும் அடுத்த வருடம் எலிசபேத்மகாராணியார் இலங்கைக்கு விஜயம்செய்வது பற்றியும் பக்கிங்காம்மாளிகை அதிகாரிகளுடன் கலந்துபேசவிருக்கிறூர். மறுபடி இவர் கப்பல்மார்க்கமாக வருகிற புரட்டாசிமாதம் 17-ந் திகதி இலங்கை வந்து சேருவார். இவர் வந்துசேருகிறவரையிலே பிரதமநீதியரசர் சேர். அலன் ரேஸ் அவர்கள் பதில்கவர்னர்—ஜெனறலாகக் கடமையாற்றுவார்.

## யாழ்ப்பாணமும் வெங்காயமும்

காங்கேசன்துறைக் கூட்டுறவுக் கமவிளைபொருள் உற்பத்தி — விற்பனவுச் சங்கத்தின் ஆதரவில் நடைபெற்ற கூட்டம்ஒன்றிலே வடபெரும்பாகக் கூட்டுறவுச்சங்கங்களின் உபறெஜிஸ்ரூரான திரு. ஆர். சி. எஸ். குக்அவர்கள் பேசியபோது: இலங்கைக்குத் தேவைப்படும் வெங்காயத்திலே நூற்றுக்கு 60விகிதத்தையும் யாழ்ப்பாணக் கமக்காரர் தற்போது உதவிவருகின்றூர்களெனக்கூறி, இந்த நாட்டின் வெங்காயத்தேவைமுழுவதையும் உற்பத்திசெய்ய அவர்கள் கூடியமுயற்சியெல்லாம் செய்யவேண்டுமெனக் கேட்டுக்கொள்ளலாயினர்; கமத்தொழிலை விருத்திசெய்வதற்கென இச்சங்கங்களுக்கு அரசாங்கம் கடனும், பிற உதவிகளும் செய்வதற்குத் தயாராயிருக்கிறதென்றும் அவர் தெரிவித்தனர்.

## பூநகரி—துணுக்காய் நெற்செய்கை

தற்போதைய அரசாங்கத்தாலே பூநகரி—துணுக்காய்ப் பகுதிகளுக்குச் செய்யப்படும் எந்தவிதமானஉதவியும் வடபகுதிமுழுவதற்குமே செய்யப்படும் உதவியாகும்; ஏனெனில், நெற்செய்கையில்ஈடுபடுமாறு யாழ்ப்பாணத்தவர்கள்அநேகர் இந்தப்பகுதிகளில் வந்து சரிந்தபடியிருக்கிறூர்களென்று தபால்—சமாச்சாரமந்திரியாரான திரு. எஸ். நடேசன்அவர்கள் பூநகரிமக்கள் தமக்குஅளித்த வரவேற்புஒன்றில் கூறியிருக்கின்றூர்.

## இரு கைத்தொழிற்சாலைகள்

அரசாங்கம் நடத்திவரும் கைத்தொழில்களில் இரண்டுமாத்திரமே சென்ற 1952-ம் ஆண்டில் ஆதாயங் காட்டியிருக்கின்றன. அவற்றில்ஒன்று, சிமெந்துக்கைத்தொழில். மற்றது, உப்புக் கைத்தொழில். சிமெந்துத் தொழிற்சாலை சென்றவருடத்திலே 18,21,712 ரூபா ஆதாயங்காட்டியுள்ளது. உப்புக் கைத்தொழிலாலே சென்றவருடம் கிடைத்துள்ளஆதாயம் 11 லட்சம் ரூபாவாகும்.

## தேர்தல்மனு விசாரணை

நாத்தாண்டியா, கோப்பாய்த் தேர்தல்ஆட்சேப மனுக்கள் முறையே வருகிறஐப்பசிமாதம் 26-ந் திகதியன்றும், கார்த்திகைமாதம் 23- திகதியன்றும் சங். சுவான்நீதியரசரால் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்படும். நாத்தாண்டியாத்தேர்தல்மனு நாத்தாண்டியாப் பிரதிநிதியாகத் தெரியப்பட்டவரும், பிரதிநிதிகள்சபையின் ஸ்பீக்கருமான திரு. அல்பேட் எவ். பீரிஸ்அவர்களின் தேர்தலைஆட்சேபித்துத் திரு. பி. எஸ். பெர்ணுண்டோ என்பவரால் சமர்ப்பிக்கப்பட்டது. கோப்பாய்த் தேர்தல்மனு கோப்பாய்ப்பிரதிநிதியாகத் தெரியப்பட்ட திரு. சி. வன்னியசிங்கம் அவர்களின் தேர்தலைஆட்சேபித்துக் கொக்குவிலைச்சேர்ந்த திரு. பி. சின்னத்துரை என்பவரால் சமர்ப்பிக்கப்பட்டது.

## ஏற்றுமதியாகவிருக்கும் உப்பு

இவ்வருடத்திலே இலங்கையிலுள்ள உப்பளங்களில் முன்னில்லாதவிதமாகப் பெருந்தொகையானஉப்பு விளைந்திருக்கிறது. அதனுல் இங்கிருந்து முதன்முறையாகப் பிறநாடுகளுக்கு 20,000 தொன்உப்பு ஏற்றுமதிசெய்யக்கூடிய நிலைமைஏற்பட்டிருக்கிறது. அரசாங்க உப்புப்பகுதியிலே நியமனம் பெற்ற ஐக்கியநாடுகளின்நிபுணர் கூறிய ஆலோசனையை மேற்கொண்டு உப்புச் செய்கையில் அநேக திருத்தமான முறைகளைக் கையாடியமையாலே இம்முறை 70,000 தொன்உப்பு விளைந்திருக்கிறது.. தேவைக்குமேற்படவிருக்கும் 20,000 தொன்உப்பிலே பெரும்பகுதி யப்பானுக்கு ஏற்றுமதிசெய்யப்படவிருக்கிறது.

## ஐம்பதுரூபா கடனுல்

வதுளைப்பிரிவிலே அழுவத்துகொடை எனுங்கிராமத்தில் என். எம். காலுபண்டாஎன்பவன் தனது உடன் கமக்காரனும், உறவினனுமான முத்துபண்டாவைக் கொலைசெய்தானென்று தொடரப்பட்டிருந்தவழக்கு கண்[illegible] சுப்பிறீங்கோட்டிலே விசாரணை[illegible]யப்பெற்று எதிரி கொலைக்குற்றவா[illegible]யாகிச் சென்றவெள்ளிக்கிழமை மரணதண்டனை விதிக்கப்பட்டனன். முத்துபண்டாஎன்பவன் காலுபண்டாவுக்கு 50 ரூபா கடனுகக்கொடுத்திருந்தான். அந்தக்கடனைத் திரும்பக்கொடுக்குமாறு கேட்டபோது உண்டானசச்சரவில் காலுபண்டா அவனைக் குற்றிக்கொன்றுவிட்டான். கடன்கொடுத்த பலன்இதுதானு?

## தேர்தல் விசாரணைச்செலவு

பாராளுமன்றத்துக்குச் சிலாபப் பிரதிநிதியாகத் தெரியப்பெற்றிருந்த திரு. எஸ். சி. ஷெர்லி கோறியாஅவர்களின் தேர்தலைஆட்சேபித்துத் திரு. ஜே. சி. டபிள்யு. முனசிங்கஎன்பவர் சுப்பிறீங்கோட்டுக்குச் சமர்ப்பித்த மனு சங். சுவான் நீதியரசராலே சமீபத்தில் விசாரணைசெய்து தள்ளப்படலாயிற்று. இந்த மனுவிசாரணைச் செலவுபற்றிச் சென்றவியாழக்கிழமை நீதியரசர் ஆலோசித்துவிட்டு 30,000 ரூபாவாக அதைக் குறித்திருக்கின்றூர். அதனுல் மனுவைச்சமர்ப்பித்தவர் இத்தொகையை மற்றவருக்குக் கட்டவேண்டியவர். திரு. முனசிங்கா இத்தீர்ப்பைஆட்சேபித்துச் சுப்பிறீங் கோட்டுக்கு அப்பீல்மனு சமர்ப்பித்திருக்கின்றூர்.

## புதிய அரசிறைவருடம்

வருகிறஐப்பசி 1-ந் திகதியுடன் ஆரம்பமாகவிருக்கும் புதியஅரசிறை வருடத்து அரசாங்க உத்தேச வரவுசெலவுத்திட்டத்தை நிதிமந்திரியார் இம்மாதம் 23-ந் திகதியன்று பிரதிநிதிகள்சபையில் சமர்ப்பித்து, அதுபற்றிய சொற்பொழிவை நிகழ்த்துவார். அதிலேஅவர் விதிக்கஎண்ணியிருக்கும் புதியவரிகள்பற்றிப் பேசுவார். இந்த உத்தேச வரவுசெலவுத் திட்டத்தைப் பற்றிச் சபைஅங்கத்தவர்கள் ஆராய்ந்து ஆலோசிப்பதற்கென அடுத்தசபைக் கூட்டம் 29-ந் திகதிக்குப் பின்போடப்பட்டு அதன்மேல் ஏழுதினங்களாக விவாதம் நடந்தேறவிருக்கிறது.

* * *

## நன்றியறிந்த ஸ்தோத்திரம்

அண்டிவந்தோர்க்கு அயராது அருள் புரியும் பாத்திமாமாதாவினதும், அர்ச். அந்தோனியாரினதும் வேண்டுதலினூல் நான் கேட்ட மன்றூட்டுக் கிடைத்தது. நன்றியறிதலாக நேர்த்தியின்படி இதைப் பிரசுரிக்கிறேன். இவர்களுடையநாமங்கள் எங்கும் புகழப்படுவதாக!

S. T.



# கத்தோலிக்க சமாச்சாரம்

## பாத்திமா அன்னையின்யாத்திரை

பாத்திமாநாயகியின் திருச்சுரூபம் ஒன்று பிறேசில்நாடு முழுவதும் ஓர்வருடகாலமாக நடத்திய யாத்திரையின் முடிவுவிழா அந்நாட்டின் தலைப்பட்டணமாகிய றையோடி ஜனேய்றோநகரில் ஆடம்பரமாக நடைபெற்றபோது ஒருலட்சம் மக்கள்வரையிலே அதிற் கலந்துகொண்டார்கள். அவ்வேளை இரும்புத்திரைக்குப் பின்னுளுள்ள நாடுகளில்வேதகலாபனை முடிவடையும்படியாக விசேஷ செபங்கள் செய்யப்பட்டன. அந்நகர் அதிமேற்றிராணியாரான கருதினல் கமறு ஆண்டவர் அச்சுரூபத்தின் சிரசில் தங்க முடிஒன்றைச் சூட்டினர். இச்சுரூபம் தற்போது அங்கே பாத்திமா மாதாபேரால் கட்டப்பெற்றுள்ள ஓர்கோயிலில் பூச்சியமாக ஸ்தாபிக்கப்பட்டிருக்கிறது.

## மனம் மாறுகின்றதா ?

ருஷியஆட்சிப்பீடத்தின் மனமாற்றமும், "சமாதான" மனப்பான்மையும், தங்கள் நாட்டில் அதிகரித்துவரும் அமைதியினமும்காரணமாகச் சீனக்கமயூனிஸ்தஅதிகாரிகள் சமயவிஷயமாய் அதிகம் இளக்காரமாக நடந்துகொண்டு வருவதாகவும், அதன்விளைவாகக்கடந்தமூன்று வருடங்களிலும் அதிகம் குறைந்ததொகையாகச் சென்றவைகாசியில் சீனவிலிருந்து ஏழு கத்தோலிக்க மிஷனரிமாரே வெளியேற்றப் பட்டதாகவும் செய்திகிடைத்திருக்கிறது. சீனவில்இன்னமும் 600 பிறதேச கத்தோலிக்க மிஷனரிமார்வரையில் இருந்துவருகிருர்கள். சென்றவைகாசியிலே அத்துணை சிறுதொகையான மிஷனரிமார் அங்கிருந்து வெளியேற்றப்பட்டமையானது சீனக்கம்யூனிஸ்தர்களின் மனப்போக்கிலே தீர்க்கமான ஓர்மாற்றத்தின் அறிகுறியாகுமென்று கருதப்படுகிறது. அங்கு சிலபகுதிகளிலே பிறதேச கத்கோலிக்க மிஷனரிமார் திவ்வியபூசைநிறைவேற்றுதற்கும், பிரசித்தமாகத் தேவதிரவியானுமானங்களை வழங்குவதற்கும் திருப்பவும் அனுமதிக்கப்பட்டிருக்கிறார்கள். சென்றவைகாசி 13-ந் திகதியன்று பூச்சோநகர் ஆசனக்கோவிலில் நடந்தேறிய பாத்திமா கொண்டாட்டங்களிலே மூவாயிரம்பேருக்குமேல் கலந்து கொண்டார்கள்.

## வேதசாட்சியான குருவானவர்

மரியாயின் சபையைச் சேர்ந்தவரும், ஓஷானியாவின் முதல் வேதசாட்சியுமான மூத். பீற்றர் சனெல்சுவாமியாருக்கு அர்ச்சியசிஷ்டபட்டம் சூட்டுதற்கென எடுத்தாளப்பட்ட இருபுதுமைகளையும்பற்றி விசாரணைசெய்வதற்காகச் சமீபத்திலே திருச்சடங்காசார திருச் சங்கத்தைச் சேர்ந்த கருதினல்மார்களும், ஆலோசகர்களும், குருசிரேஷ்ட அதிகாரிகளும் வத்திக்கானில் ஒன்றுகூடினர்கள். மூத். சனெல் சுவாமியார் 1837-ம் ஆண்டு ஓஷானியாவுக்கு அனுப்பப்பட்டு மூன்று வருடத்துள் பியுருனுதீவிலே பெருந்தொகையானேரை மனந்திருப்பிக் கத்தோலிக்கசமயத்தில் சேர்த்துவிட்டார். அத்தீவை ஆட்சிசெய்துவந்த நியூலிகிஅரசனின் புதல்வரும் ஓர் கத்தோலிக்கராத் தீர்மானித்து, சுவாமியாரால் மனந்திருப்பப் பெற்றவர்களில் ஒருவராயினர். தனது புதல்வர் மனந்திரும்பியதை அறியவந்ததும் அரசன் உக்கிரகோபங் கொண்டவனுய் வேதகலாபனைஒன்றைத் தொடக்கிவிடவே, அவனதுமந்திரிமார்களில் ஒருவனை முசுமுசுஎன்பவன் சுவாமியாரைக் கொலைசெய்துவிட்டான். சனெல்சுவாமியார் 1889-ம்ஆண்டு 13-ம் சிங்கராய பாப்பானவரால் முத்திப்பேறுபெற்றபட்டம் அருளப்பெற்ருர்.

## இங்கிலாந்தும் வேல்ஸும்

இங்கிலாந்திலும், வேல்ஸிலுமுள்ள கத்தோலிக்கரின் தொகை சென்றவருடத்திலே நாற்பதினுயிரம்பேரால் அதிகரித்திருக்கின்றது. இவ்விருநாடுகளிலும் வருடந்தோறும் வளர்ந்தவர்களாய் மனந்திரும்பிக் கத்தோலிக்கதிருச்சபையில் சேர்ந்து கொள்ளுகிறவர்களின் தொகை பதினேராயிரம் பேருக்கு மேலாகும். அங்குள்ள கோவில்களின்தொகை சென்றவருடத்திலே 28ஆல் அதிகரித்து 2,895 ஆகியிருக்கிறது. பிரத்தியேக சின்னக்கோவில்களின் தொகை 7 ஆல் அதிகரித்து 1,101 ஆகியிருக்கிறது. தற்போது இங்கிலாந்திலும், வேல்ஸிலும் 6,751 குருமார் தொண்டாற்றி வருகின்றனர். இருநாடுகளிலுமுள்ள சனங்களில் நூற்றுக்குப் 10 விகிதமானேர்—அதாவது 40 லட்சம்பேர் கத்தோலிக்கரென மதிப்பிடப்படுகிறது. கடந்த இருபதுவருடங்களிலும் குருமாரின்தொகை இருமடங்காக அதிகரித்தபோதிலும் அவர்கள்தொகை அங்கே கத்தோலிக்க திருச்சபை அடைந்துவரும் விருத்திக்குப் போதியதன்று. அங்குள்ள மேற்றிராசன குருமடங்களில் தற்போது 1,600 குருத்துவ மாணவர்கள் இருந்து வருகின்றுர்கள்.

## மரியகோறெற்றியின் முதற்கோவில்

1950-ம் ஆண்டின் பரிசுத்த வருடத்திலே பரிசுத்தபாப்பரசரால் அர்ச்சியசிஷ்டபட்டம் அருளப்பெற்றவளான மரியகொறெற்றியின்பேரால் ஆஸ்திறேலியாவிலே புதிய தென்வேல்ஸைச்சேர்ந்த டறெற்றன் எனுமிடத்தில் நவமாகக் கட்டப்பெற்ற அழகியகோவிலானது சமீபத்திலே ஆசீர்வதிக்கப்பட்டபோது பெருந்திரளான மக்கள் அதற்குச் சமூகமளித்திருந்தார்கள். அர்ச். மரியகொறெற்றிபேரால் ஆஸ்திறேலியாவில் கட்டப்பட்டுள்ள முதற்கோவில இதுவாகும்.

# அர்ச். இராயப்பர் மகாலயம்

றோமாபுரி ஏழுகுன்றுகள்மீது கட்டப்பட்ட எழிலமிகும் ஓர் புனிதநகர். இக்குன்றுகளில் ஒன்ருகிய சத்தூர்னீனுஸ் (Saturninius)குன்றின்மேல் சதத்தூர்னீனுஸ்எனும் தெய்வம் குடிகொண்டதுஎன்று அக்காலத்திய அஞ்ஞானமக்கள் விசுவசித்தார்கள். இதற்குக் கப்பித்தோலினுஸ் (Capitolinus) அதாவது தலைநகர்என்று பெயர் வழங்கலாயிற்று. ஏனெனில், இங்குதான் மூதன்முதல் சனங்கள் குடியேறினர். இவர்கள் இடையர்ஆவர்.

இதற்கருகாமையிலே தைபர் (Tiber) நதிஓடுகிறது. அக்காலத்தில் குடியேறிய இடையர் இதற்கு றூமா (Rouma) என்று பெயரிட்டனர். காலம்செல்லச் செல்ல இப்பெயர் றோமைஎன மாறியது. இந்தநதியின் வலப்பாகத்திலுள்ள குன்றிற்கு வத்திக்கான்குன்று எனப்பெயர். இதன்மீதே அர்ச். இராயப்பர் ஆலயம் கட்டப்பட்டிருக்கிறது.

### ஆலயத்தின் அஸ்திவாரம்

நீரோ சக்கரவர்த்தி காலத்திலே வத்திக்கானில் எங்கும் செழுமையான தோட்டங்கள் இருந்தன. றோமைக்குத் தீமூட்டினுன் பாதகன்நீரோ. சனங்கள் கோபமூண்டெழவே, அவர்கள்கோபத்திற்குத் தப்பிக்கொள்ளக் குற்றமற்ற கிறீஸ்துவர்கள்மீது அப்பழியைச் சுமத்தினுன். எனவே, அநேகாயிரம் கிறீஸ்துவர்கள் கைதுசெய்யப்பட்டனர். பயங்கரவாதைகள் அனுபவித்து வேதசாட்சிகளாக உயிர்துறந்தனர். இந்த வத்திக்கான் தோட்டங்களில் தார், மெழுகு முதலியவற்றைச் சாக்குகளில்இட்டு, கிறீஸ்துவர்களை அதனுள் போட்டுக்கட்டிக் கம்பங்களிலநாட்டி, தீபங்களாக எரியவிட்டு, இக்கொடூர காட்சியைக்கண்டு இன்புற்று மகிழ்ந்தான் துரோகி நீரோ.

### அர்ச். இராயப்பரின் மரணம்

இக்கொடூர கல்நெஞ்சன் நீரோவின் ஆட்சியின்போது அர்ச். இராயப்பர் றோமைக்குச் சென்று, அங்கு சத்தியமதத்தைப்போதித்து அநேகரை மனந்திருப்பி அவர்களிடையே உழைத்துவந்தார். இவரது உயிரைக் காக்கவேண்டி, றோமையைவிட்டு ஓடிப்போகும்படி மக்கள் இவரை வேண்டினர். இவரும் அவர்களுடைய வேண்டுகோளுக்கிணங்கி வெளியேபோகும்வழியில், நமதுதிவ்விய இரட்சகர் சிலுவையைச் சுமந்துகொண்டு எதிரே வருவதைக்கண்டு ஆச்சரியமடைந்தார். "ஆண்டவரே, நீர்எங்கு செல்கிறீர் ?" என வினவினர். "உனக்குப்பதிலாக, நாம் றோமைக்குச்சென்று மீண்டும் சிலுவையில் உயிர்விடப்போகிறோம்" எனப் பதிலளித்தார் ஆண்டவர். இராயப்பர் இப்பதிலைக்கேட்டு மனம்நொந்து "ஆண்டவரே, வேண்டாம் ; நானேமறுபடியும் செல்லுகிறேன்" எனக்கூறித் திரும்பிச் சென்று அஞ்சாநெஞ்சத்துடன் சேவைபுரிந்துவந்தார். ஒருநாள் இவரும்பிடிபட்டு, மமேர்த்தீன் சிறையில் அடைக்கப்பட்டார். இறுதியாகக் கி. பி. 67-ம் ஆண்டு ஆனி 29-ந் திகதி சிறையிலிருந்து வெளியே கொண்டுபோகப்பட்டுச் சிலுவையில் தலைகிழாக அறையப்பட்டார். திருச்சபையின் தலைவராகிய இவர் யேசுவின்பொருட்டும், றோமையில் கிறீஸ்துவின் வெற்றிக்கொடி நாட்டப்படும்பொருட்டும் தமது உயிரையே தத்தம்பண்ணினர். இவரதுசரீரம் அங்கு புதைக்கப்பட்டது. திருச்சபையின் தலைநகராக விளங்கப்போகும் றோமைக்கு இவரே முதல்அஸ்திவாரக் கல்லாயினர்.

### ஆலயம்கட்டப்பட்ட வரலாறு

அர்ச். இராயப்பர் அடக்கம் செய்யப்பட்டஇடத்திலே 90-ம் ஆண்டு அனக்கிளேத் எனும் பாப்பானவர் ஒருசிறிய செபக்கூடம் கட்டுவித்தார். இரண்டு நூற்றுண்டுகளுக்குப் பின் கொன்ஸ்தந்தீன் சக்கரவர்த்தி 324-ம் ஆண்டு இவ்விடத்தில் பெரியதோர் ஆலயத்தைக் கட்டத் தீர்மானம் செய்தார்.

— றோமை யாத்திரிகர் —

அவரே மண்வெட்டியைக் கையிலெடுத்து, மண்ணை ஓர்கூடையில் வெட்டிப்போட்டு, தாமேசுமந்து சென்று, அஸ்திவாரக்கல வைக்கவேண்டிய இடத்திற் கொண்டுபோய்க் கொட்டினர். இங்ஙனம் பன்னிரண்டு அப்போஸ்தலர்களின் மகிமைக்காகப் பன்னிருகூடை மண் கொண்டுபோய்ச் சேர்த்துத் தற்போது உலகபிரசித்திபெற்ற ஆலயமாய் விளங்கும் ஆலயத்திற்கு அஸ்திவாரக்கல் அமைத்தார். அதற்குப்பின் வேலை ஆரம்பிக்கப்பட்டு 324-ம் ஆண்டு ஆலயம்பூர்த்தியானது. பதினெஞ்றரை நூற்றுண்டுகளாக நிலைபெற்றிருந்த பிறகு இவ்வாலயத்தில பழுதுஏற்படவே, அது இடிந்துவிழும நிலைமையில் இருந்தது.

1450-ம் ஆண்டு நிக்கொலாஸ் எனும்பாப்பானவர் இன்னும் பெரிதாகவும், அழகுவாய்ந்ததாகவும் இதனைக் கட்டவிரும்பித் தற்போதுள்ள அர்ச். இராயப்பர் ஆலயத்தைக் கட்டத்தொடங்கினர். ஆனல், அது முடிவுபெறவில்லை. 176 வருஷங்களுக்குப்பின்னரே வேலை முடிந்தது. 1626-ம் ஆண்டு புதியஆலயம் அபிஷேகம் பண்ணப்பட்டது. சக்கிறிஸ்தை பூர்த்தியானது. எனவே, 330 வருஷங்களாக 48 பாப்பரசர்கள் தொடர்ந்து வேலைசெய்து உலகத்திற்குச் சிறந்தஆபரணமென மதிக்கத்தகும் இவ்வாலயத்தைக் கட்டி முடித்தார்கள்.

(தொடர்ச்சி 5-ம் பக்கம்)

## எனது பூசைப் புத்தகம்

வெளிவந்து விட்டது!

மருதமடுத் திருப்பதியிலும் பெற்றுக்கொள்ளலாம்.

கிளேஸ்பேப்பர் ரூபா 5-00
பைபிள்பேப்பர் ரூபா 5-75

மனேஜர்;
அர்ச். சூசைமாமுனிவர்
அச்சியந்திரசாலை,
யாழ்ப்பாணம்.


## ஆடி மாதம்

போதுக் கருத்து :— தனிமனிதனுக்குரிய மதிப்பை யாவரும் எங்கும் வழங்கும்படியாக வேண்டிக்கொள்வது.

மிஷன் கருத்து :— உண்மையைப் பரப்புவதற்கு அச்சியந்திரம், றேடியோ, சினிமா உதவும்படியாக மன்றாடுவது.

### திருநாள் அட்டவணை

ஆடிமாதம் — 1953

| | | | |
|---|---|---|---|
| வெ | 10 | அ. ஏழு வேதசாட்சிகள் | (சி) |
| சனி | 11 | அ. பத்திநாதர், பா. வே. | (வெ) |
| ஞா | 12 | இஸ்பிரீத்து ஆகம. பின் 7-ம் ஞாயிறு — அ. குயல்பேர்த்தருளப்பர், பா. வே. | (ப) |
| திங் | 13 | அ. அனக்கிலேத்தப்பர், பா. வே. | (சி) |
| செ | 14 | அ. பொனுவெந்தூர், மே. வேதபா. | (வெ) |
| புத | 15 | அ. என்றிக்கப்பர், இ. | (வெ) |
| வி | 16 | உத்தரியமாதா திருநாள் | (வெ) |


சத்தியவேத
பாதுகாவலன்

1953-ம் ஆண்டு
ஆடி மாதம் 9-ந் திகதி


## ருஷியாவின் கேடுகாலம்

ருஷிய சர்வாதிகாரியான தோழர்ஸ்ராலின் இறுதிகண்டதுமுதல் சோவியற்அரசின் கொடுமையாட்சிக்கும், அடிமையாட்சிக்கும் இறுதிகாலம் ஆரம்பமாகிவிட்டதென்று நம்புதற்கான அறிகுறிகள்பல காணப்படுகின்றன. ஸ்ராலினின்ஆட்சிகாலத்திலே இரும்புத்திரைக்குப்பின்னுள்ள நாடுகளெல்லாம் அகத்தேகுமுறும் அக்கினிமலைகள்போன்று அமுங்கிக்கிடந்தன. ஆனல், இன்றோ அம்மலைகள்பிளந்து அக்கினிப்பிழம்புகளைக்கக்கிப் பெரிதும் அட்டகாசஞ் செய்வதுபோன்று அந்நாடுகளும் கட்டுக்கடங்காது கொந்தளித்தெழுந்து குமுறத் தொடங்கியிருக்கின்றன. தொழிலாளர்களின் சுவர்க்கலோகமெனக் காரணமின்றித் தான்தோன்றித் தனமாகப் பெயர்வாங்கிய கம்யூனிஸ்தஉலகில் தொழிலாளர்களே கம்யூனிஸ்த ஆட்சியை எதிர்த்துக் கலகஞ்செய்யத் தொடங்கிக் கொண்டார்களெனில், இதில் நூதனமொன்றும் இல்லையா?

சோவியற்ருஷியாவின்தோழநாடுகளாய்—இல்லை — அடிமையாட்சிநாடுகளாய் இருந்துவருகின்ற கிழக்குஜேர்மனி, போலாந்து, ரூமேனியா, செக்கோசிலவாகியா, பல்கேரியா, ஹங்கேரிஆதியாம் நாடுகளெல்லாம் கம்யூனிஸ்தஆட்சியினல் கண்டபலன் ஒன்றுமில்லையென்பதை நன்கு கண்டுகொண்டனவாய், அந்தக் குடுரஆட்சியை எதிர்த்துக் கொந்தளித்துக்கொண்டிருக்கின்றன. கம்யூனிஸ்த கிழக்குஐரோப்பாவில் அடங்கியுள்ள இந்தநாடுகளிலே— வழமையில் கோதுமைவளமும், ஆடுமாடுமுதலாம் மிருகவளமும்தேங்கும் இந்தநாடுகளிலே உண்டாயிருக்கும் உணவுக்கஷ்டங் காரணமாகச் சனங்கள் பெரும்கஷ்டங்களுக்குள்ளாய், இனிமேல் பொறுத்திருப்பது மதியாகாது என்பதை இனிதேஉணர்ந்து கம்யூனிஸ்தஆட்சிக்கும், அதன் அட்டுழியங்களுக்கும் ஓர் கரைகாண முனைந்துநிற்கின்றார்கள்.

கருதினல் மின்ட்சென்ரிஆண்டவரைப் பெரும் அநீதமாகச் சிறைவைத்திருக்கின்ற ஹங்கேரியில் எழுந்திருக்கும் எதிர்ப்புக் கிளர்ச்சியாலே அங்குள்ள கம்யூனிஸ்தகட்சி கண்விழித்தெழுந்து, சமீபத்திலே கிழக்கு ஜேர்மனியிலும், செக்கோசிலவாகியாவிலும் நடந்தவாறு அங்கும்கருமங்கள் நடைபெருவண்ணம் அதன்தலையான கம்யூனிஸ்தபிரதமரையும், அவருடன் மற்றும் மூன்றுமந்திரிமாரையும் நீக்கிவிட்டது. தற்போது புதியபிரதமராக வந்திருக்கும் நாஜிஎன்பார்: அரசாங்க கட்டுப்பாடுகளையெல்லாம் பரக்கத் தளர்த்திவிடுகிறேன்; காவல் முகாங்களை அகற்றிவிடுகிறேன்; அதிகங்கூடிய சமயசுதந்திரம் அளிக்கிறேன்; பிரத்தியேகமாகத் தொழில் முயற்சிகள் நடத்த அனுமதி தருகிறேன்; கைத்தொழில்களிலும் பார்க்கக் கமத்தொழிலுக்கே கூடிய அவகாசம் அருளுகிறேன் எனத் தெரிவித்திருக்கின்றார். போலாந்துமுதலாம் ஏனையநாடுகளிலும் தொழிலாளர்கள் அரசாங்கத்தைஎதிர்த்து வேலைநிறுத்தங்களும், ஆர்ப்பாட்டங்களும், செய்துவருவதாகச் செய்திகள் பரந்திருக்கின்றன. கிழக்கு பேர்லின்நகரிலே சென்றஆனி மாதம் 17-ந்திகதியன்று ஜேர்மன் தொழிலாளிகள் வேலைநிறுத்தஞ்செய்து, கலகம்நடத்தியதிலிருந்து இரும்புத்திரை நாடுகளில் இருந்துவந்த மறைமுகமானஎதிர்ப்புகள் இன்று பகிரங்கமாக நடைபெறத்தொடங்கிவிட்டன.

நிற்க, தனதுதோழநாடுகளை அடிமைவாழ்க்கையில் ஆட்சிகொள்ளும் சோவியற்ருஷியாவில்தானும் அமைதியுண்டா? இல்லை. சோவியற் சக்கிராதிபத்தியத்தின்பலம் கம்யூனிஸ்த கட்சியிலா? அன்றேல் சோவியற்சேனபலத்திலா? என்பதையிட்டுக் கடுமையானபோராட்டம் இரண்டிற்குமிடையே நடந்துவருகிறது. இதன்விளைவாய்க் கம்யூனிஸ்தகட்சிக்கும் ருஷியபோர்வீரர் கட்சிக்குமிடையே பெரும்பிளவு ஏற்படுமானல், கம்யூனிஸ்த கட்சிஅரசாங்கம் நடைபெறும் நாடுகளிலே கலகங்கள்எழுமிடத்து— சோவியற் இராணுவம் அவற்றைஅடக்குவதிலே பராகண்டிதஞ்செய்யுமிடத்து, ஊர்இரண்டுபட்டால் கூத்தாடிக்குத் தாயமென்றவாருகத்தான் கருமம் முடியுமன்றோ! இன்னும் சோவியற்தோழநாடுகள் இரும்புத்திரைக்கு வெளியேயுள்ள நாடுகளுடன் இஷ்டம்போல வர்த்தகம்நடத்தத் தொடங்கியிருப்பதிலிருந்து அவைகள் ருஷியாவின் கட்டுப்பாட்டுக்கு அடங்குவனபோல்இல்லை. எவ்விதம்நோக்கினும் ருஷியாவின் கேடுகாலம் அண்மிவிட்டதென்றேஎண்ணலாம்.

## இஸ்பிரீ. ஆகமனத்தின் பின் 7-ம் ஞாயிறு

### சுவிசேஷ வாசிப்பு

(மத். 7 : 15—21)

அர்ச். மத்தேயு எழுதிவைத்தபடி பரிசுத்த சுவிசேஷத்தின் தொடர்ச்சி :— அந்தக்காலத்திலே யேசுநாதர் தம்முடைய சீஷர்களுக்குத் திருவுளம் பற்றினதாவது : ஆட்டுத்தோலைப் போர்த்துக்கொண்டு உள்ளத்திலே பறிக்கிற ஓனாய்களாய் உங்களிடத்தில் வருகிற கள்ளத் தீர்க்கதரிசிகள் மட்டில் எச்சரிக்கையாயிருங்கள். அவர்களுடைய கனிகளைக்கொண்டே அவர்களை அறிவீர்கள். முட்செடிகளில் திராட்சப் பழங்களையாவது, முட்பூண்டுகளில் அத்திப்பழங்களையாவது பறிப்பாருண்டோ? அவ்வாறே நல்லமரமெல்லாம் நல்ல கனிகளைக் கொடுக்கும்; கெட்டமரமோ கெட்டகனிகளைக் கொடுக்கும். நல்லமரம் கெட்ட கனிகளைக் கொடுக்கமாட்டாது; கெட்டமரம் நல்லகனிகளைக் கொடுக்கமாட்டாது. நற்கனி கொடாத மரமெல்லாம் வெட்டுண்டு அக்கினியிலே போடப்படும். ஆதலால், அவர்களுடைய கனிகளைக்கொண்டே அவர்களை அறிவீர்கள். என்னை நோக்கி ஆண்டவரே, ஆண்டவரே என்று சொல்லுகிறவர்கள் எல்லோரும் மோட்ச இராச்சியத்திற்குள் பிரவேசிப்பதில்லை. பரமண்டலங்களில் இருக்கிற என் பிதாவின் சித்தத்தை நிறைவேற்றுகிறவனே மோட்ச இராச்சியத்தில் பிரவேசிப்பான் என்று திருவுளம்பற்றினர்.

கிறீஸ்துவே, உமக்குப் புகழ் உண்டாவதாக.

## ஜெருசலேமும் ரோமைநகரும்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

றடைந்தபோது, அங்கு ஓர்பிரமாண்டமான மலை இருக்கக்கண்டேன். அதன் உச்சிமுதல் அடிவாரமீருகப் படிகள் பல அமைந்திருப்பதை அவதானித்தேன். நான்கொண்ட ஆனந்தத்திற்கோ ஓர்அளவில்லை.

மலைச்சிகரத்தின் மீது நிமிர்ந்துநின்றேன். நாலாபக்கமும் புன்னகையுடன் உற்றுநோக்கினேன். ஏழுசிறுகுன்றுகளிலே கட்டியெழுப்பப்பட்டதும், நித்தியநகரமெனப் பலராலும் போற்றப்படுவதுமான ரோமைமாநகர் முழுவதும் தெள்ளத்தெளிவாய்க் கண்களுக்குத் தென்பட்டது. செசார் அகுஸ்துஸ், நீரோ, தியோக்கிளேசியான் முதலாம் மன்னர்களால் ஆட்சிசெய்யப்பட்டு, "கடற்தலைவி" என்ற சரித்திரச்சிறப்புப்பெயர்பெற்று விளங்கிய ரோமைஇராச்சியம் என் கண்முன் பரந்துநின்றது.

## சுதேச வர்த்தமானம்

### மகாராணியாரின் விஜயம்

எலிசபேத்மகாராணியாரும், அவர் நாயகரான எடின்பறோவின் டியூக் கோமகனும் அடுத்தவருடத்திலே இலங்கைக்கு விஜயஞ்செய்வதையிட்டு நமது அரசாங்கம் ஒன்றரைலட்சம் ரூபா செலவிடத்தீர்மானித்திருக்கின்றது. மகாராணியாரும், அவர் கோஷ்டியினரும் அடுத்தவருடம் சித்திரைமாதம் 10-ந் திகதியன்று இலங்கைவந்துசேர்ந்து, பதினொருதினங்கள் தங்கியிருந்து அடுத்த 21-ந் திகதி இங்கிருந்து புறப்படுவார். கடைசித்தினமன்று இராணிமாளிகையில் விசேஷ பட்டஅளிப்பு வைபவம்ஒன்று நடந்தேறும். மகாராணியார் இங்குதங்கியிருக்கும்போது பொலனறுவை, சிகிரியா, நுவரெலி, கண்டி, பேராதனை முதலாம்இடங்களைத் தரிசிப்பார். கண்டியில் தங்கியிருக்கும்போது, கண்டி மாளிகையின் எண்கோணமண்டபத்திலிருந்து இராசபெரகாரைக் காட்சியைக் கண்டுகளிப்பார்.

### பங்கீட்டு அரிசிவிலை

கூப்பன் அரிசியென்று அறியப்படுவதான பங்கீட்டுஅரிசிவிலை இம்மாதம் 20-ந்திகதி திங்கட்கிழமைமுதல் படிஒன்று 70 சதமாக ஏற்றப்படவிருக்கிறது. தற்போது கூப்பன்அரிசிவிலை படிஒன்று 25 சதமாகும். அரசாங்கம் பங்கீட்டுஅரிசியின்விலையை ஏற்றியதோடு நான்குபிரிவினரான பாவிப்பாளருக்கும் கொடுபடும் அரிசியின் அளவையும் கூட்டியிருக்கிறது. அதன்படி, தொழிலாளருக்கு வாரம் ஒன்றுக்கு இரண்டுபடியும், வளர்ந்தவர்களான சாதாரணபேர்களுக்கு ஒன்றேகாற்படி அரிசியும், பிள்ளைகளுக்கு ஒருபடியும், குழந்தைகளுக்கு முக்காற்படியும் வழங்கப்படும். சீனி, மா, ஆகியவற்றின்விலை முன்போலவே இருந்துவரும். புதிய ஒழுங்குப்படி அரசாங்கம் கூப்பன்அரிசியைக் கொள்முதலில் படிஒன்றுக்குப் 12 சதம்குறைத்தும், மாவைக் கொள்முதலில் றுத்தல்ஒன்றுக்கு 8சதம்குறைத்தும் கொடுக்கின்றது. அரிசிஅளவைக் கூட்டுவதாலே அரசாங்கத்துக்கு வருடம்ஒன்றுக்கு 1 லட்சத்துப் 10 ஆயிரம்தொன் அரிசி கூடுதலாகத் தேவைப்படும்.

### தேர்தல்விசாரணை மனுக்கள்

இதுவரையிலே பத்துத்தேர்தல்விசாரணைமனுக்கள் சுப்பிறீங் கோட்டிலே விசாரணைக்கு வந்திருக்கின்றன. இவைகள் பிரதிநிதிகள்சபையிலுள்ள கண்டி, கழுத்துறை, சிலாபம், சாவகச்சேரி, பட்டிருப்பு, அவிசாவெலை, நிவிற்றிகலை, அற்றனகலை, பொத்துவில், மட்டக்களப்புஎனும் பத்துஸ்தானங்களுக்கும் தெரியப்பெற்றவர்களின் தேர்தலை ஆட்சேபித்துச் சமர்ப்பிக்கப்பட்டனவாகும். கண்டிமனு ஒன்றில்மாத்திரம் தேர்தல்சரியற்றதென்று தீர்ப்பாயிற்று. மட்டக்களப்புமனுவிஷயமாய் இன்னும்தீர்ப்புச் சொல்லப்படவில்லை. ஏனைய எட்டும் தள்ளப்படலாயின. இன்னும் விசாரணை செய்யப்படவேண்டியனவாய் ஒன்பது மனுக்கள் இருக்கின்றன. இவைகள் ஹக்மன, மாத்தளை, வெலிகம, கல்முனை, காங்கேசன்துறை, நீர்கொழும்பு, யாழ்ப்பாணம், கோப்பாய், நாத்தாண்டியாத் தேர்தல்கள்பற்றிய மனுக்களாகும்.

# சீரினள் தந்த சின்னம்

எண்சீர் விருத்தம்

1

அந்திக்கோர் வழிதேடின் உத்தரீயம்
அணிவதிலே ஆசைமிகக் கொள்ளவேண்டும்
சிந்தித்தே செபமாலை செபிக்கவேண்டும்
செகமதிலே இவைபரவச் செய்யவேண்டும்
சந்தித்தோர்க் கிவைபெருமை சாற்றவேண்டும்
சந்ததமும் இவற்றைநிலை நாட்டவேண்டும்
வந்தித்தே இவைகொண்டு வாழ்த்திவேண்டின்
வானரசி தராததொன்று வையம்உண்டோ?

2

மல்லிகையின் அரும்பெடுத்து மாலையாக்கி
மனமகிழ மார்பணிந்து வந்தேயென்ன!
எல்லையிலா வனப்புடைய கோகினூரை
எடுத்துவெளி நெஞ்சிடத்தே ஏந்தியென்ன!
தொல்லைதரு மரணம்எமைச் சூழ்ந்தபின்னர்
துணைக்கிவைகள் வந்துநெறி நிறுத்துமாமோ?
சொல்லிவரு மாலையொடு உத்தரீயம்
சோதிமய வீடடையச் செய்யுமன்றோ!

3

மாமரியும் பாலனுடன் வந்தேதோற்றி
மங்காத சபைமுதல்வன் சீமோன்என்னும்
நாமமுறு முனிவருக்கு நல்கிச்சென்ற
நல்லவிரு தானதிரு உத்தரீயத்
தாமமதைப் பக்தியுடன் தாங்குவோர்கள்
தங்கள்எழில் வாழ்வில்ஒளி தழைக்கவாழ்ந்து
சேமமதாய் உத்தரிப்புத் தலமுந்தப்பிச்
சென்றிடுவர் மோட்சமனை தேவதாயால்

4

அருவுருவாம் ஆண்டவன்பால் அகத்தைவைத்தே
அவரன்னை மாமரிபால் அன்புவைத்தே
கருணைபுரி செபமாலை கரத்திலேந்திக்
கார்மேலின் உத்தரீயம் தரத்தில்தாங்கின்
வருபிணிகள் மங்கிவிசை மடிந்திடாவோ?
வான்கதவும் வருகவென வழிவிடாதோ?
இருளகலு மார்க்கமிதற் கீடும்யாதோ?
இனியெடுத்துச் சொல்லுதற்கே இடமும்உண்டோ?

"யுவன்"

## சந்தீயோகுமையோர் திருநாள்—கிளாலி

### யாத்திரீகர்களுக்கோர் சிறந்தவசதி! கூட்டுறவியக்கத்தின் குதூகல சேவை!!

கிளாலி சந்தீயோகுமையோர் கோவிற்திருநாளுக்கென வருபவர்களுக்கு வசதிசெய்யும்பொருட்டுப் பளைக் கூட்டுறவுச்சமாசம் ஓர் கிளைப்பண்டகசாலையை 21-7-53 திங்கட்கிழமைதொடக்கம் கோவிலுக்குஅருகாமையில் அமைத்து நடத்தவிருக்கின்றது.

மலிந்தவிலையில் சிறந்த உணவுப்பொருட்களும், இன்னும் தேவையான சகலபொருட்களும் திருநாள் முடிபுவரையும் இக்கடையில் பெறுவதற்குவேண்டிய ஒழுங்குகள் செய்திருக்கிறோம்.

பளைக் கூட்டுறவுச்சமாசம்,
பளை.

க. பே. முத்தையா
காரியதரிசி

## அர்ச். இராயப்பரின் மகாலயம்

(3-ம் பக்கத் தொடர்ச்சி)

இந்தஆலயம் உலகிலுள்ள மற்றெல்லா ஆலயங்களையும் விடப் பெரியது. இதன்விஸ்திரணம் 18,000 சதுரஏக்கர். ஆலயத்தின் உட்பாகத்தின் நீளம் 615 அடி. அகலம் 450 அடி. ஆலயமண்டப உட்பாகத்தின் உயரம் 150 அடி.. கோபுரத்தின் உயரமானபாகம் தரைமட்டத்திலிருந்து 435அடி. இவ்வாலயம் 60,000 பேரை எளிதில் கொள்ளக்கூடியது. இதனைக் கட்டிமுடிக்கச் செலவானபணம் சுமார் 20 கோடி ரூபா. வருடந்தோறும் கட்டட பாதுகாப்பின் பொருட்டுப் 1,00,000 ரூபா செலவிடப்படுகிறது.

ஆலயமுகப்பில் ஓர்மண்டபம் உண்டு. அம்மண்டபத்தின்மீது 13 சுரூபங்கள். யேசுக்கிறீஸ்துநாதரின் சுரூபமும், பன்னிரு அப்போஸ்தலர்களின் சுரூபங்களும் வைக்கப்பட்டுள்ளன. ஒவ்வொரு சுரூபத்தினதும் உயரம் 20 அடி. ஆனால், கீழேயிருந்து பார்க்குங்கால் 6 அடிச் சுரூபங்களாகவே தோற்றுகின்றன.

### உலகின் மிகப்பெரியகோயில்

ஆலயத்தின்முன்பாக விசாலமான ஓர்பெரிய திடல்உண்டு. இதிலே சுமார் ஒருலட்சம்பேர் கூடியிருக்கலாம். இதன் மத்தியிலே 100 அடிஉயரத்தில் ஒரேயொருகல்லில் செதுக்கப்பட்ட ஒருதூண் நிற்கிறது. இதன்மீது அர்ச். இராயப்பர் சுரூபம் ஸ்தாபிக்கப்பட்டுள்ளது. இதற்குள்ள 182 படிகளின் வழியாக ஏறி உச்சியை அடையலாம். இந்தக்கல்லைப் பெரியதோர் படகிலேற்றி 300 பேர் வலித்து நைல்நதி, மத்தியதரைக்கடல் வழியாகக்கொண்டுவந்து சேர்த்தனர்என அறிகிறோம்.

நித்தியநகரின் அஸ்திவாரக்கல்லானது முதல் பாப்பானவரான அர்ச். இராயப்பருடையவும், வேதசாட்சிகளுடையவும் இரத்தம்என உணர்ந்து, நமது கிறீஸ்துவ விசுவாசத்தைத் தென்புடன் பாதுகாப்போமாக. திவ்விய யேசுவுக்குச் சேவைசெய்வதில் ஊக்கம், ஆர்வம், மனத்திடமுள்ளவர்களாய் இருப்போமாக.

## மற்றும்ஓர் ஆஸ்பத்திரி

பம்பாய்மாகாணத்திலே ஜகதியாநகரில் இந்திய செஞ்சிலுவைச் சங்கம் அமைத்திருக்கும் கஸ்தூரிபாய் பிரசவ ஆஸ்பத்திரியும், குழந்தைகள் சிகிச்சைவிடுதியும் சென்றஜூனிமாதம் 14-ந் திகதியன்று பம்பாய்ச் சுகாதார மந்திரியாரான திரு. ஷான்திலால் ஷா அவர்களால் திறந்து வைக்கப்படலாயின. இந்தஆஸ்பத்திரியின்நிர்வாகசபையானது இவைகளைத் திருஇருதயஆண்டவர்சபைக் கன்னியாஸ்திரீமாரிடம் ஒப்படைத்துள்ளது. தூத்நகரிலுள்ள குஷ்டரோகர்கள்விடுதியைக் கடந்த ஈராண்டுகளாக இச்சபைக்கன்னியாஸ்திரீமாரே கண்காணித்து வருகின்றார்கள். ஜகதியா ஆஸ்பத்திரிக்கு ஏற்கனவே நான்குகன்னியாஸ்திரிமார் வந்திருக்கின்றனர். திறப்புவிழாவிற்கு ஜகதியாநகர்வாசிகள் பெருந்தொகையினராக விஜயஞ்செய்திருந்தார்கள்.

## அறிவித்தல்

மன்னாரில்உள்ள ஓர் அச்சியந்திர சாலையில் வேலைசெய்ய இரண்டு "கொம்பசிற்ற"ரும், ஒருஇயந்திர வேலையாளும் தேவை. கல்வி, வேலைத்தராதரம் என்பவற்றுடன் கீழ்க்காணும் விலாசத்துக்கு மனுப்பண்ணவும்.

வி. அ. அழகக்கோன்,
கி. ஊ. ச. தலைவர்
"அருந்ததி"
மன்னார்

## நன்றியறிந்த ஸ்தோத்திரம்

எனதுவருத்தத்தின்நிமித்தம் பரிசுத்த பாத்திமாநாயகியின் இரக்கம் கிடைக்கும்படிஓர் நவநாள்தொடங்கினேன். நவநாள் கடைசித்தினமன்று பூரணசுகம் பெற்றேன். பாத்திமாஅன்னையின் நாமம் என்றென்றும் புகழப்படும்படியாக இதனைப் பிரசுரிக்கிறேன். R.

## நன்றியறிந்த ஸ்தோத்திரம்

யேசுவின் திருஇரக்கத்தினாலும், அர்ச். தேவமாதா, சூசையப்பர், அந்தோனியார் இவர்களுடைய மன்றாட்டினாலும், என் அண்ணச்சிக்கு ஏற்பட்டிருந்த வழக்கு வெற்றியாக முடிந்ததற்கு நன்றியறிதலாக நேர்த்தியின்படி இதைப் பிரசுரிக்கிறேன்.

கோறமணி

## குறைவான றெயின்கள்

ஞாயிற்றுக்கிழமையிலும், மற்றும் வாரநாட்களிலும் அநேகறெயின்வண்டிகளின் போக்குவரத்தை நிறுத்துவதாலே இரண்டுகோடி ரூபாவரையில் மிச்சம்பிடிக்கலாமென றெயில்வேப் பகுதியார் நம்புகின்றனர். ஏலவே நிறுத்தப்பட்டுள்ள றெயின் வண்டிப் போக்குவரத்துகளால் ஞாயிற்றுக்கிழமையில் 1,600 மைல் தூரப்பிரயாணமும், வாரநாட்களில் 600 மைல்தூரப் பிரயாணமும்குறைந்துபோயிருக்கிறது. றெயின்வண்டிகளின் போக்குவரத்தைக் குறைப்பதாலே மைல் ஒன்றுக்கு றெயில்வேக்குப் 13 ரூபா மிச்சம்ஏற்படுவதுடன் ஞாயிற்றுக்கிழமையில் வேலைசெய்வாருக்கு வழமையான சம்பளத்திலும் இரண்டரை மடங்காகக் கொடுபடும் மேலதிகமானவேலைநேரச் சம்பளமும் மிச்சமாகிறதாம். இன்னும் செலவுச் சுருக்கத்தையிட்டு றெயின்கள் தரித்துச்செல்லும் பாதைப்பக்க ஸ்ரேஷன்கள் ரிக்கெற்ஏசன்றுகளிடம் ஒப்படைக்கப்பட விருக்கின்றன.

## புதிய ஆயுர்வேத வைத்தியசாலை

விசர்நாய்களால் கடியுண்டு பைத்தியங்கொள்ளும்ஆட்களை ஆயுர்வேத முறையாகக் குணமாக்கும் வைத்திய சிகிச்சைக்கென்று கொழும்பிலே வெறெஹெறு எனுமிடத்தில் புதிதாக அமைக்கப்படவிருக்கும் ஸ்ரீலங்கா ஆயுர்வேத வைத்தியசாலைக்குப் பிரதமர் டட்லி சேனநாயகஅவர்கள் சென்றவெள்ளிக்கிழமை அஸ்திவாரக்கல் நாட்டினர். விசர்நாய்களாலே கடியுண்டு பைத்தியங்காணுகிறவர்களுக்குச் சிகிச்சையளிப்பதற்கென இலங்கையில் ஆயுர்வேதவைத்தியசாலை ஒன்று அமைக்கப்படுவது இதுவே முதன்முறையாகும்.

## சீமேந்துப் பாவனை

இலங்கையிலே சீமெந்துப்பாவனை 1947-ம்ஆண்டுமுதல் இருமடங்குக்கு மேல் அதிகரித்திருக்கிறது. அவ்வருடத்தில் ஏறக்குறைய 70,000 தொன் சீமெந்து செலவாயிற்று. தற்போதோ வருடம்ஒன்றுக்கு 1,60,000 தொன் தேவைப்படுவதாகக் கண்டறியப்பட்டிருக்கிறது. இதிலே காங்கேசன் துறையிலுள்ள அரசாங்க சீமெந்துத் தொழிற்சாலை ஒருலட்சம்தொன் சீமெந்து உதவக்கூடியது. மீதியான சீமெந்து இறக்குமதிசெய்யப்படுகிறது. இதில் அதிகமானபகுதி யப்பானிலிருந்தே இறக்குமதியாகிறது. சென்ற சில தினங்களில் யப்பானிலிருந்து 3,550 தொன்னும், இங்கிலாந்திலிருந்து 1,200 தொன்னும் இறக்குமதியாயிற்று.

## புதிய உபநீதியரசர்கள்

சுப்பிறீங்கோட்டிலே காலியாயிருக்கும் ஸ்தானங்களை வகிப்பதற்கென்று உபநீதியரசர்களாகத் திரு. எச். டபிள்யு. ஆர். வீரசூரியஅவர்களும், திரு. கே. டி. டி சில்வாஅவர்களும் நியமனஞ்செய்யப் பெற்றிருக்கின்றனர்.

## சுகாதாரவாரம்

பதினைந்தாவது அகில இலங்கைச் சுகாதாரவாரம் வருகிறஞாயிற்றுக்கிழமை சுகாதாரமந்திரியாரால் பரப்பப்படும் வானொலிச்செய்தியுடன் ஆரம்பமாகும்.

## நன்றி

கருணைக் கடலாகிய சதாசகாயமாதாவின் கருணையால் நான் அவவிடங்கேட்ட சகாயங் கிடைத்தது. அவவுக்கு நன்றியறிந்த ஸ்தோத்திரம்.

வ. சூ.

— யூதகுருமாரும், யூதமதசங்கத்தில் பணியாற்றுவோரும் வேலைநிறுத்தஞ்செய்தமையாலே ஜெருசலேம் நகரிலுள்ள 1,20,000 யூதர்களும் விவாகங்களை நடத்திவைக்கவோ, அன்றேல் தங்களுள் இறந்தவர்களை அடக்கஞ்செய்யவோ இயலாதிருக்கின்றார்களாம். மூன்றுமாதச்சம்பளம் கொடுபடாமையே வேலைநிறுத்தத்துக்குக் காரணமாகும். சிவில்விவாகஞ் செய்துகொள்ள இவர்களுக்கு அனுமதியில்லை.

— இந்தியாவிலே கஸ்மீரின் மகா உன்னதமான நன்என்ற சிகரத்தில் எவருமே இன்னும்ஏறவில்லை. அதனையும்ஏறி வெற்றி கொள்ளவென்று பிரான்சியகோஷ்டிஒன்று பரீஸ்நகரிலிருந்து சென்றதிங்கட்கிழமை புறப்பட்டிருக்கிறது. இந்தக்கோஷ்டியிலே உடைகள் நிர்மாணிப்பவளான 34 வயசுடைய குளோட் கோகன் எனும் மாதும் அடங்கியிருக்கின்றாள். இவள் பிரான்சிலே மலையேறுவதில் அதிகத் திறமை வாய்ந்தவளாம்.

# பாலர்  பக்கம்

## அண்ணா சொல்வது

அருமைச் சகோதரங்களே!

நீங்கள் குதிரைப் பந்தயங்களைப் பற்றிக் கேள்விப்பட்டிருப்பீர்கள். சிலவேளை உங்களில் சிலர் ஒன்று, இரண்டைப் பார்த்தும் இருப்பீர்கள். எல்லாக் குதிரைகளையும் பந்தயம் ஓடக் கொண்டு வந்து விடுவார்களா? இல்லை. நல்ல இனமான குதிரைகளாகத் தெரிந்து எடுத்து, அவைகளை நன்றாகப் பழக்கி எடுத்து, பந்தயம் வெல்லும் என்று கண்டால்தான் கொண்டு வந்து விடுவார்கள். என்றாலும் இவற்றிலும் எல்லாக் குதிரைகளும் பந்தயம் வெல்லும் என்று காத்திருக்க முடியாது. சில குதிரைகளே ஒன்று, இரண்டு, மூன்று, நாலு என்று முதல் இடங்களை வகிக்க, மற்றவை எலலாம் அடைவது என்ன என்று உங்களுக்குத் தெரியும்தானே.

அன்பான சகோதரங்களே! நீங்கள் பல இடங்களிலும் இருந்து பாலர்பக்கத்துக்குக் கட்டுரைகளும், கதைகளும், பாட்டுகளும், படிப்பனைகளும் தொகையாக எழுதி வருகிறீர்கள் அல்லவா? இவைகளை நீங்கள் எழுதும் போதெல்லாம் எதை நினைக்க வேண்டும்? குதிரைப் பந்தயத்தையே நினைக்க வேண்டும். அவைகள் பாலர்பக்கத்தில் கட்டாயம் பந்தயம் வெல்லும்; அவைகள் மிகநன்றாக இருப்பதை அண்ணா கவனித்து ஆனந்தங்கொண்டு பாலர்பக்கத்தில் தப்பாது அவைகளை வெளியிடுவார்; அப்போது வெற்றிதான் என்ற நம்பிக்கையுடன் திறமாகவும், அழகாகவும், திறமையாகவும் எழுதுங்கள். மற்றச் சகோதரங்களுக்கும் இடம் கிடைக்கத் தக்கதாய் எழுதுவதைச் சுருக்கமாக எழுதுங்கள். அப்போது பாலர்பக்கம் உங்களாலே நன்கு பரிமளித்துக் கொண்டு இருக்கும் என்று சொல்ல வேண்டியதில்லை.

உங்கள் அன்புள்ள
அண்ணா

## சூரியனே!

— I —

காலையிற் கீழ்த்திசை உதிப்பவனே!
கதிரொளி வீசிச் சிரிப்பவனே!
மாலையில் மேற்றிசை குதிப்பவனே!
மறுநாள் வரையெங் கிருப்பாயோ?

— II —

பூமியில் உயிர்கள் வளர்ப்பவனே!
பொழியும் மழையைக் கொடுப்பவனே!
பூமலர் இதழ்கள் விரிப்பவனே!
புதுமைகள் எவ்விதம் பெற்றாயோ?

— III —

சந்திர னுக்கொளி தருபவனே!
சந்தத மும்போய் வருபவனே!
அந்தரந் தன்னில் திரிபவனே!
அற்புதம் யாரிடங் கற்றாயோ?

— IV —

பொன்னொளி வெயிலைச் சொரிபவனே!
பொங்கும் நன்மைகள் புரிபவனே!
தன்னல மின்றி உழைப்பவனே!
தாரணி யின்னொளி நீதானே!

'ஜெயம்'

## தருணத்தை இழந்தவள்

அமெரிக்க ஐக்கிய தேசத்திலே அவர் ஓர் லட்சாதிபர். அவருக்கு ஓர் மகள். அவளை உலகில் எவருக்கும் வாராதவோர்நோய்பிடித்தது. அவரும் அவளைத்தமது தேசத்திலுள்ள எல்லாடக்றர்மாரிடமும் காட்டினார். ஆனால், எவராலும் நோயின் பெயரைத்தானும் சொல்ல முடியவில்லை. பின்பு வியன்னா நகரிலே லோறன்ற் என்னும் ஓர்பெரிய டக்றர் இருப்பதை அறிந்து அவரிடம் மகளைக் கொண்டுசென்று காட்டி நோயைக் குணமாக்கினர்.

அமெரிக்கடக்றர்மார் இதைஅறிந்து டக்றர் லோறன்ரின் புதிய வைத்திய முறையைக் கற்றுக்கொள்ளுமாறு அவரைத் தங்கள் தேசத்துக்கு வரும்படி அழைத்தனர். அவர்களின் அழைப்புக்கு இசைந்து அவரும் அங்கு போனார். அப்போது அங்குள்ள நோயாளர் பலரும் அவரிடம் சென்று தங்கள் நோயைச் சொல்லித் தக்கமருந்துகள் பெற்றுப் போனார்கள்.

ஒருநாள் டக்றர் லோறன்ற் தமக்கு ஒருநாள் ஓய்வுதர வேண்டும் என்று கேட்டு நாட்டைப் பார்க்கக் கடற்கரையோரமாகச் சென்றார். செல்லும் போது மழை பெய்யத் தொடங்கியது. அவரோ குடை கொண்டுபோகவில்லை. மழையில் நன்றாய் நனைந்தார். கடைசியாக ஓர் வீட்டிற்குச் சென்று கதவைத் தட்டினார். அப்போது உள்ளே இருந்த ஓர்பெண் முறுமுறுத்துக் கொண்டுவந்து, என்னகாரியம்? என்று கேட்டாள்.

தாயே, மழையாய் இருக்கிறது; இங்கே சற்றுவேளை தங்கிப் போகலாமா? என்று அவர் கூறினார். இதைக் கேட்டதும் அவள் சினந்துகொண்டு என் மகளுக்குச் சுகமில்லை; இங்கே தங்க முடியாதென்று சொல்லி அவரை அனுப்பிவிட்டாள். ஆனால், அவர் வெளியே போகும்போது அவரைத் தேடி ஓர் கார் வந்து அவரை ஏற்றிச் சென்றது.

மறுநாள் பத்திரிகைகளில் ஓர்செய்தி வெளிவந்தது. டக்றர் லோறன்ற் மழையில் நனைந்ததும், அவர் ஓர்வீட்டில் ஒதுங்கப்போனபோது வெளியேற்றப்பட்டதும் அதிலே வெளிவரலாயிற்று. அந்தப்பத்திரிகைகளில்ஒன்றை அவரை வெளியேற்றிய பெண்ணும் வாசித்தாள். பின்புதான் எண்ணினாள், அவரிடம் தன்மகளைக் காட்டியிருந்தால் தன்மகளைக் குணப்படுத்தியிருப்பார்; நல்ல ஓர் தருணத்தை இழந்துவிட்டேனே என்று கவலைப்பட்டு அவருக்கு ஓர் மன்னிப்புக்கடிதம் அனுப்பினாள். ஆனால், அதற்குப் பதிலே கிடைக்கவில்லை.

சகோதரர்களே! ஆண்டவரும் எங்களைத் தேடி வரும்போது அந்த அரும் தருணத்தை இழந்துவிடாது கவனமாக இருப்போம்.

மி. அ. யேசுதாசன்
சம்பத்திரிசியார் கல்லூரி,
யாழ்ப்பாணம்.

## செபமாலைத் தாசன்

ரவீந்திரன் என்னும் கொள்ளைக் கூட்டத் தலைவன் வழிப்போக்கரை அடித்துக் கொன்று பெரிய அக்கிரமங்கள் செய்து வந்தான். அதிகாரிகள் அவனுடைய அட்டகாசத்தைப் பொறுக்க முடியாமல் அவனைக் கைதுசெய்து அரண்மனை கொண்டு சென்று அரசர் முன் நிறுத்தினார்கள். அவனைச் சிறையில் போடும்படி அரசர் உத்தரவிட்டார். ரவீந்திரன் சிறையில் இருந்து வாடினான். நாட்கள் பல ஓடின. ஆனால், அவனது கோபக்குணம் நீங்கவில்லை. அவன் சிறையில் இருக்குஞ் சமயம் ஓர்நாள் அங்கு சேவியர் என்னும் சிறைக்கைதி செபமாலை செபித்துக்கொண்டு இருந்தான். ரவீந்திரன் அவன்பின் நின்று அதைப் பார்த்துக் கொண்டிருந்தான். பிறகு தானும் சொல்லவேண்டுமென்ற ஆவல் அவனைத் தூண்டியது. நாளடைவில் அவனும் சேர்ந்து செபமாலை சொன்னான். ஈற்றில் அவனது உள்ளம் மாறத் தொடங்கியது. விடுதலை அடைந்ததும் நேரே ஓர் குருவானவரிடம் சென்று ஞானஸ்நானம் பெற்றான். குருவானவர் அவனை ஆசீர்வதித்து, செபமாலையாலே மனந் திரும்பியதால் "செபமாலைத் தாசன்" என்று அவனுக்கு நாமஞ் சூட்டியதாகச் சொன்னார். பாலர்களே நாமும் செபமாலையை அனுதினம் செபித்து வருவோமாக.

வி. பிரான்சீஸ், மன்னார்.

விளையாட்டு

## வினையமாய் முடிந்தது

ஓர்ஊரில் ஒருசிறுவன் இருந்தான். அவன்பெயர் கண்ணன். அவன் சிறுவனாக இருந்தபோதே அவனுடைய தந்தை இறந்துபோயினார். அவன் சிறு வயது முதலே அதிகம் குறும்பனாக இருந்தான். பாடம்படியாது பாடசாலைக்குச் செல்வான். ஆசிரியர் தண்டித்தால் அவரைஎதிர்ப்பான்.

ஒருநாள் அந்தஊரில் ஒருகூட்டம் நடந்தது. அதற்குக் கண்ணனும் சென்றிருந்தான். அங்கு யாரோ ஒருவர் நன்றாகப் பேசினார். எல்லோரும் அவர் பேசுவதைக் கவனமாகக் கேட்டுக் கொண்டு இருந்தனர். அப்போது அவன்: "ஐயோ, பாம்பு! பாம்பு!" என்று கத்தினான். மக்கள் பயந்து ஓட்டம் பிடிக்கவே கூட்டம் கலைந்தது. கண்ணன் விழுந்து விழுந்து சிரித்துக் கொண்டு: "அட முட்டாள் சனங்களே! நான் விளையாட்டுக்காக அப்படிச் சொல்ல, நீங்கள் இப்படிப் பயந்து ஓடுகின்றீர்களே" என்று சொல்லித் தானும் வீட்டுக்குத் திரும்பினான்.

சில நாட்களுக்குப்பின் அந்தஊரில் மற்றோர் கூட்டம் நடந்தது. அதன் நடுவே கண்ணன் அமர்ந் திருந்தான். அவன் இம்முறை தன்னை அடக்கிப் பேச்சைக் கவனமாகக்கேட்டுக் கொண்டு இருந்தான். அப்போது அவன் இருந்த இடத்திற்கு மேலே ஓர்மரக்கிளையில் இருந்து ஒரு பாம்பு தொப்என்று அவன்தலைமேல் விழுந்தது. கண்ணன்: "பாம்பு பாம்பு!" என்று கதறினான். ஆனால், பயனில்லை. ஆரோ விளையாட்டுக்காக அப்படிச் சொல்லுகிறான் என்று நினைத்துச் சனக்கூட்டம கலையவில்லை. பாவம்! கண்ணன் பாம்பு கடித்து விட்டதால் அந்த இடத்திலேயே விழுந்து உயிர் விட்டான்! அவனது குறும்புத் தனத்தால் அவன்வாழ்வு முடிந்து விட்டது.

ச. சேபஸ்தியம்மா
ந. பெ. பாடசாலை, மன்னார்.

## அண்ணாவுக்கு லிகிதம்

அன்புள்ள அண்ணாவுக்கு:

அண்ணா! யான் கருக்குப்பனை றோ. க. பாடசாலையில் கல்வி கற்கிறேன். "சத்தியவேத பாதுகாவலன்" எங்கள் ஆசிரியை அவர்கட்கு வருவதால் எனக்கும் அதை வாசித்துக் கொள்ள வசதி ஆகிறது. அதில் யான் இதர சேதிகளை விடப் "பாலர் பக்க"த்தையே பலமுறை வாசிப்பேன்.

அண்ணா! இதுகாறும் இலங்கையின் பல பாலுமுள்ள எமது மாணவத் தோழர், தோழிகள் எழுதிவந்த சின்னஞ்சிறு கட்டுரைகள், ஆம் அவற்றின் சாராம்சங்கள் என்மனதை ஈர்த்து விட்டன. மேலும், என்னையும் சில சிறு கட்டுரைகளை எழுத ஊக்கித்து விட்டன. ஆகவே, அண்ணா! இனிமேல் யான் அனுப்பும் கட்டுரைகளையும் பாலர் பக்கத்தில் பிரசுரிப்பீர்களா? யானும் 25-6-53இன் "பாதுகாவல"னில் இருந்த அண்ணாவின் போதனைகளுக்கு இணங்கக் கட்டுரை வரைய முயற்சிப்பேன். எனவே, எனது முயற்சியின் பயனை அண்ணா வரவேற்பீர்கள் எனத் திடமாக நம்புகிறேன். தங்களின் பதிலைப் "பாதுகாவல"னின் பாலர் பக்கத்திலே கண்டுகொள்ள வெகு ஆசையாய் இருக்கிறேன்.

வணக்கம்.

"செல்வி ஜேம்ஸ் ஊர்சுலா"
கருக்குப்பனை.

* * *

அன்புள்ள சகோதரிக்கு:— உமது கட்டுரைகளை வரவேற்க எப்போதுமே ஆயத்தமாய் இருக்கிறேன்.

—அண்ணா.

(தொடர்ச்சி 7-ம் பக்கம்)

## பொதுவர்த்தமானம்

### 66 தினசரிப் பத்திரிகைகள்

அமெரிக்க ஐக்கியதேசத்தில் நியூயோக்நகரில்மட்டும் 66 தினசரிப் பத்திரிகைகள் வெளியாகின்றன. அந்நகரிலே 80 லட்சம்மக்கள் உள்ளனர். இவர்களுள் தினசரிப்பத்திரிகைகள் வாங்குவோர் சுமார் 70 லட்சம்பேர். இந்த 66 தினசரிகளிலும் ஆங்கிலபத்திரிகைகளே அதிகம். அவற்றைப் படிப்போர் சுமார் 65 லட்சம்பேர். ஹங்கேரியமொழி, போலாந்தமொழி, சீனமொழி, கிரேக்கமொழி, ஜேர்மன் மொழி, எபிரேயமொழி, ருஷிய மொழி, ஸ்பானியமொழி, இத்தாலிய மொழிஆகிய வெளிநாட்டுமொழிகளிலும் நியூயோக்நகரிலே தினசரிப்பத்திரிகைகள் வெளியாகின்றன. இவற்றைப் படிப்போர்தொகை 5 லட்சம்.

### ருஷிய அதிர்ஷ்டச்சீட்டு

"அதிர்ஷ்டச்சீட்டுப் போடுவது முதலாளித்துவ சமுதாய ஆமைப்பின் பைத்தியக்கார முறையில்ஒன்று" என்று சோவியற்ருஷிய அதிகாரவர்க்கத்தினர் கூறிவந்தகாலம் மலையேறிவிட்டது. இப்போது சோவியற்அரசினர் 1,500 கோடி றூபிள்களுக்கு (1,800 கோடிரூபா) அதிர்ஷ்டக்கடன் சீட்டுகளை வெளியிட்டுள்ளனர். 20 வருடத்திலே கடன் திருப்பிக் கொடுக்கப்படுமாம். இந்தப்புதிய கடன்சீட்டுகளைப்பற்றிய விபரங்களை வெளிப்படுத்திய சோவியற்அரசினரின் அறிக்கையிலே, "முதலாளித்துவ நாடுகளில் யுத்தசெலவுகளுக்காகவும், ஆயுதப் பெருக்கத்துக்காகவும், பெரிய வர்த்தகக்கூட்டத்தினரின் இலாபங்களை அதிகரிக்கச் செய்வதற்காகவுமே கடன் சீட்டுகள் வெளியிடுகின்றனர்; நாமோ வெனில், சமாதானத்தையொட்டிய பொருளாதார அபிவிருத்திக்கெனவே இந்தக்கடன்சீட்டுகளை வெளியிடுகிறோம்" என்று கூறப்பட்டுள்ளது.

### அறிஞர்கூறும் அறிவுரை

அண்ணாமலைச் சர்வகலாசாலையின் உபவேந்தர் சி. பி. இராமசாமி ஐயர் அவர்கள் இவ்வருடவகுப்புகளை ஆரம்பித்துவைத்துப் பேசுகையில் பின்வருமாறு கூறியிருக்கின்றார். "இக்காலத்திலே மாணவர்கள் கலைகளையும், பாஷைகளையும் புறக்கணிப்பது வருந்தத்தக்கது. இந்தத் தலைமுறையைச் சேர்ந்தவர்களின் எழுத்துக்களை நான் சிறிதுகாலமாக ஆழ்ந்து படித்துவருகிறேன். இவர்கள் எழுதும் ஆங்கிலத்தின்தரம் குறைந்துவிட்டது. இதற்கேற்றபடி தமிழ்அல்லது இதரபாஷைகளின் தரமாவது உயர்ந்திருந்தால் காரியமில்லை. அதுவுமில்லை. இன்று உலகில் ஆங்கிலந்தான் முதன்மைஸ்தானம் வகிக்கிறது. தாய்ப்பாஷையில் மாத்திரம் மாணவர்கள் கவனம்செலுத்தினால் அறிவுவளர்ச்சியிலே வேகத்தோடு நாம் முன்னேறமுடியாது. உஸ்மானியா சர்வகலாசாலை இந்தச்சோதனையை ஆரம்பித்துப் பின்னர் கைவிட வேண்டியதாயிற்று. ஆகையால், மாணவர்கள் எந்தப்பாடம்படித்தாலும் தினமும் சிறிதுநேரம் ஆங்கிலமும், இலக்கியமும் படிப்பதில் செலவிடவேண்டும்."

### சுரங்கத்தில் இறந்த குருமார்

இரும்புத்திரை நாடுகளில் ஒன்றாகிய செக்கோசிலவாகியாவிலே ஜசிமொவ் நகருக்குச்சமீபமான யூறேனியம் சுரங்கங்களில் வேலைசெய்துவந்த குருமாரில் நாற்பதுபேர் கடந்தஆறு மாதங்களிலும் இறந்துபோயிருப்பதாக வீயன்னாநகரிலிருந்து அறிவிக்கப்படுகிறது. அந்தச்சுரங்கங்களிலே 25,000 அடிமைத்தொழிலாளருடன் 250 குருமார்வரையிலே வேலைசெய்துவருகின்றார்கள். இவர்கள் 26 வயதுக்கும் 38 வயதுக்கும் இடைப்பட்டவர்கள். இவர்கள் பிற்னோ, ஹஜெக், மொறுவெக்ளனுமிடங்களிலுள்ள காவல்முகாங்களில் இருந்து அனுப்பிவைக்கப்பட்டவர்கள்.



## நாளு சங்கதிகள்

— மகாராணியாரின் முடிசூட்டு விழாவிற்குச் சமுகமளித்தபின் சுவிற்சர்லாந்துக்குச் சென்றிருந்த பாகிஸ்தான் பிரதமரான திரு. முகமதுஅலி அவர்களும், அவர்பாரியாரும் சென்ற ஆனிமாதம் 8-ந்திகதி ஜெனிவாவிலிருந்து ரோமைநகர்சென்று அங்கு மூன்று நாள் தங்கியிருந்தபோது 19-ந் திகதியன்று வத்திக்கான் மாளிகைசென்று பரிசுத்தபாப்பரசரின் பிரத்தியேக பேட்டிபெற்றுக்கொண்டார்கள்.

—பிரித்தானியிலே மரணதண்டனையைப் பரிசோதனைநிமித்தமாக ஐந்து வருடங்களுக்கு நீக்கிவிட வேண்டுமெனக்கேட்டு ஓர் தொழிற்கட்சிஅங்கத்தவரான திரு. சிட்னி சில்வர்மன் என்பவர் அங்கு பாராளுமன்றத்திலே சென்ற 1-ந் திகதி ஓர் பிரேரணை கொண்டுவந்தார். ஆனால், அதற்கு மாறாக 256 பேரும், சார்பாக 195 பேரும் வாக்களித்தமையால் அது அரங்கேறவில்லை.

— அர்ச். பதுவை அந்தோனியார் தமதுகாத்தால் எழுதிய ஒருதொகையான கையெழுத்துப்பிரதிகள் சமீபத்திலே கண்டெடுக்கப்பட்டிருப்பதாக "ஒசேர்வாத்தோறே ரோமானோ." எனும் வத்திக்கான்பத்திரிகை கூறுகின்றது. அதனால் அவர் எழுதியவற்றிலே அநேகமானவைகளையிட்டுப் பல நூற்றாண்டுகளாக இருந்துவந்த வாக்குவாதம் இனிமேல் நின்றுவிடுமென எதிர்பார்க்கப்படுகிறது.

— அயர்லாந்துதேச விமெறிக் நகரிலே பிறிட்ஜெற் கென்னடி எனும் மூதாட்டி சென்ற ஆனிமாத முதல் வாரத்திலே தனது நூறுவதுவருடப் பிறந்தபெருநாளைக் கொண்டாடினாள். இவள் நாள்தோறும் சமீபமாகவுள்ள அகஸ்தீனியரின்கோவில்சென்று காலை 7 மணிக்குப் பூசை கண்டு வருகிறாள். கண்ணாடியில்லாமலே இன்றைக்கும் வாசித்தும், எழுதியும் வருகின்றாள்.

— பிரித்தானிய, அமெரிக்க, பெல்ஜிய, இத்தாலிய, ஸ்பானிய, உலாந்த இராணுவ போக்குவரத்து விமானங்கள்பல சென்றஆனிமாதம் 12-ந் திகதி பன்னூற்றுக்கணக்கான விமானிகளுடன் லூர்துபதிக்குச்சமீபமான ராற்ப்ஸ் ஒசன் விமானநிலயத்தில்போய் இறங்கின. இவர்களெல்லாம் பிரான்சிய இராணுவ வீரர்கள் லூர்துபதிக்கு நடத்திய மூன்று நாள் யாத்திரையிற் கலந்துகொண்டார்கள்.

— மோல்த்தாதீவிலுள்ள கலாசாலைகள், கல்லூரிகளைச்சேர்ந்த மாணவர்கள் ஒவ்வோர்ஞாயிற்றுக்கிழமைசாயந்தரமும் செபமாலையில் ஓர் காரணிக்கத்தை மோல்த்திய, ஆங்கிலபாஷைகளில் வானொலிமூலம்பரப்பிச் சங்கீதங்களும் பாடிவருகின்றார்கள். இந்தப் 15 நிமிஷ நிகழ்ச்சியும் "பாத்திமாவின்குரல்" என அறியப்படுகின்றது.

— தேவதாயாரது மோட்சாரோபணத்தின் ஞாபகார்த்தமாகத் துருக்கிய தபால்அதிகாரிகளால் தபால்முத்திரைகள் அச்சிடப்பட்டிருப்பதாக அங்காராநகரிலிருந்து செய்திகிடைத்திருக்கிறது. இந்தஞாபக தபால்முத்திரைகள் வருகிறஆவணிமாதம் 15-ந் திகதியாகிய தேவதாயாரின் மோட்சாரோபணதிருநாளன்று விற்பனையாகவிருக்கின்றன.

— போலாந்திலே கத்தோலிக்கமக்கள் ஞாயிற்றுக்கிழமைகளில் திவ்விய பூசைகாண்பதைத் தடுக்கும் ஓர்புதிய தந்திரமாக, அன்றுதினம் தொழிலாளர்கள் தங்களுக்குவேண்டியவைகளைப் போய் வாங்கிக்கொள்ளுமாறு அந்நாட்டிலுள்ள சாய்ப்புகள், பண்டகசாலைகளெல்லாம் திறந்திருக்குமென்று போலிஷ் கம்யூனிஸ்த அரசாங்கம் பிரசித்தஞ் செய்திருக்கிறது.

## பாலர் பக்கம்

(6-ம் பக்கத் தொடர்ச்சி)

### பேராசை பெரும் நஷ்டம்

ஓர்ஊரில் ஓர் பணக்காரன் இருந்தான். அவன் பெரிய உலோபி. ஒரு தருமமும் செய்யான். ஏழைகளைக் கண்டால் அடித்துத் துரத்துவான். ஒருநாள் அவன் தனதுபணம் முழுவதையும் ஒருபானையில்இட்டுத் தனதுதோட்டத்தின் ஒருமூலையில்புதைத்து, அதன்மேல் ஒருகல்லையும் வைத்துத் தினமும் பலமுறை சென்று அதைப் பார்த்து வருவான்.

இதைக் கவனித்து வந்த விறகுவெட்டி ஒருவன் ஒருநாள்இரவு அங்கு சென்று பணம் முழுவதையும் திருடிக் கொண்டு தப்பிவிட்டான். மறுநாள் உலோபி போய்ப் பார்த்தான். பணத்தைக் காணவில்லை. உடனே ஐயோ! என்று கதறி அழுதான். அப்போது அவ்வழியால்சென்ற பெரியவர் ஒருவர் கருமத்தை விசாரித்தபோது, அவன் நடந்ததைச் சொன்னான். அதைக் கேட்ட பெரியவர் இந்தப்பணத்தால் உனக்கு ஒருபலனும் இல்லை. ஆதலால் இந்தக்கல்லை அது முன்னிருந்த இடத்தில் வைத்து அதன்அடியில் உன்பணம் இருப்பதாக எண்ணி முன்போலத் தினமும் வந்து பார்த்துக் கொண்டே இரு; அவ்வாறு செய்தால் நீ முன்போலத் தனவானாய் இருப்பாய் என்று கூறிச் சென்றார். உலோபி தன் பேராசையை விட்டு வெட்கத்துடன் வீடு சென்றான். இப்பொழுது அவன் பழைய உலோபி இல்லை.

ச. ஜெயமேரித்திரேஸ்
ந. பெ. பாடசாலை, மன்னார்.

### எவரினால்?

1
தெய்வம்இல்லை என்றுசொல்லித்
தீரம்பேசும் அன்பர்காள்
வையகமும் வானகமும்
வகுத்தவர்தான் யாவரோ?
2
சந்திரரும் சூரியரும்
சஞ்சரிப்ப தெவ்விதம்?
விந்தையாகத் திரைகடலும்
விளைந்ததெல்லாம் எவ்விதம்?
3
மண்ணகத்தில் அணுக்கள்முதல்
மலர்வதெல்லாம் யாவரால்?
விண்ணகத்தில் தாரகைகள்
விளங்குவதும் யாவரால்?
4
பூமிதனில் காந்தசக்தி
புகுத்தியதும் யாவரோ?
வாவியினில் பூங்கமலம்
வைத்தவரும் யாவரோ?
5
ஆற்றினிலே தண்மைதனை
அமைத்தவரும் யாவரோ?
காற்றினிலே ஒலிஅணுக்கள்
காணவைத்தார் யாவரோ?
6
விளைத்திடாத பூமியினில்
விளைவதெல்லாம் எவரினால்?
அழைத்திடாது வான்மழையும்
அரும்புவதும் எவரினால்?
7
நீதிநெறி நேர்மையோடு
நினைத்ததெல்லாம் பார்த்திடில்
ஆதிபரனு மொருவர்
அமைத்தாரென்று காணலாம்
8
கண்ணிருந்தும் குருடர்போலக்
காதிருந்தும் செவிடராய்
எண்ணிஎதும் பார்த்திடாது
இழிவுபேசல் நன்றிதோ!
9
ஆதியோடு அந்தமான
அனைத்துமுணர் கடவுளைச்
சோதியான வள்ளல்தமைத்
துதித்து வணங்கிடாவிடில்
10
அரியதான கல்வியோடு
ஆக்கமான தர்மமும்
பரிதிகண்ட பனியதாகப்
பறந்துபோகும் உலகிலே.

(Francis Michael)

### உதிர்ந்த மலர்கள்

"உண்மையை நாடவே நமக்கு உரிமை. அது ஆண்டவனின் உடைமையாகும்." —(மான்டெயின்)

* * *

"குளிர் அதிகம்தான், நான்அணிந்திருப்பதுவும் கந்தல் ஆடைதான். ஆனால் என்ஒழுக்கம் எனக்கு உஷ்ணம் தரும்." —(டிறைடன்)

* * *

"கண்டிக்கத் தெரியாதவனுக்குக் கருணை காட்டவும் தெரியாது." —(கார்லைல்)

* * *

"கிறீஸ்துநாதர் தர்க்க சாஸ்திரம் தந்துவிட்டுப் போகவில்லை. அவர் தந்திருப்பது எளிய உண்மைகளே." —(ஹேடன்)

* * *

"வறுமை என்பது அஞ்சினவரை அடிக்க வரும் போக்கிரியாகும். ஆனால், அஞ்சாமல் எதிர்த்து நின்றால் அது நல்ல குணமுடையதே." —(தாக்கரே)

* * *

"வாழ்வு என்பது ஒரு உடை. அந்த உடை இருவகை நூல்களால் செய்யப்படுவது. ஒன்றுக்குப்பெயர் நன்மை; அடுத்தது தீமை." —(ஷேக்ஸ்பியர்)

மிக்கேல் வில்லியம்
கருக்குப்பனை

### பாதிரியாரும் செபமாலையும்

தமக்குமுன் மனந்திரும்பிக் கத்தோலிக்க திருச்சபையிற் சேர்ந்துகொண்ட பாதிரியாரிடமிருந்து பெற்றுக்கொண்ட ஓர்செபமாலையானது நியூயோக்நகரிலே ஸ்கார்ஸ்டேல் எனும் இடத்திலுள்ள கோவில்ஒன்றின் எபிஸ்கோப்பாலியன் புரொட்டஸ்தாந்த சபைப் பாதிரியாரைக் கத்தோலிக்க திருச்சபையில் கொண்டுவந்துசேர்த்துவிட்டிருக்கிறது. இவர்தான் டக்றர் ஜேம்ஸ் பிறைஸ்பாதிரியார். இவர் தமக்கு அனுப்பிவைக்கப்பட்ட அந்தச் செபமாலை வெகுமதியைப்பற்றி யாது கூறுகின்றார்: "நான்செபமாலை சொல்லத்தொடங்கினேன்; அதன்வல்லமையையும் உணரத் தொடங்கினேன்; அது கத்தோலிக்க திருச்சபையினிடமாக என்னைவழிநடத்திய உண்மையைக்கண்டடைய எனக்கு வழிபண்ணிவிடலாயிற்று" என்பதே.

இலங்கை அரசினர் புகையிரதப்பகுதி

### புகையிரதப் பாதைக் கடவைத் திருத்தங்கள்

அநுராதபுரியிலுள்ள டிக்சன் வீதிப் புகையிரதப் பாதைக்கடவை ஆடிமாதம் 12-ந் திகதி முற்பகல் 12 மணி தொடக்கம் 13-ந் திகதி காலை 6 மணி வரையும் திருத்தப்படும். இக்கடவையால் எல்லாவித போக்குவரத்தும் ஆடிமாதம் 13-ந் திகதி நடுச்சாமம் 12-01 முதல் காலை 6 மணிவரையும் தடுக்கப்படும். இந்த நேரத்திற் பழைய அநுராதபுரியிலிருந்து திருக்கோணமலை வீதிவழியே சென்று புகையிரத நிலையத்துக்குச்செல்லும் வீதியூடாக நுவரவீவாவைச் சேரலாம்.

# போர் நிறுத்தம் ஏற்படுமா?

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

சியகைதிகள் சுதந்திரம்பெற்று விடுதலையடைவார்கள். இவர்கள் தங்கள் இஷ்டம்போல் எங்கேனும்செல்லலாம். இது கண்ணியமானமுடிவு. நடுநிலைமைக் கம்மிஷனில் முக்கியபொறுப்பு இந்தியாவுடையதாகும். கைதிகளைக்காவல்செய்வது இந்தியாவின் பொறுப்பு. இதற்காக 5,000 பேர்கொண்ட இந்திய படையொன்று கோறியாவுக்குச் செல்லவேண்டியிருக்கும்.

## றீயின் சேஷ்டைகள்

கைதிகள் பிரச்சினை மட்டுமன்றி, போர்நிறுத்தம் ஏற்படுவதற்குப் பூர்வாங்கமாக இரு படைகளும் ஆக்கிரமிக்காதபடி ஒருஎல்லையைக்குறிப்பிடுதல்அவசியம். செஞ்சீனர்கள் ஆத்திரமாகச் சிலநாட்களாக முன்னேறித் தாக்குதலில் ஈடுபட்டனர். இப்பொழுது இந்த முயற்சியும் முடிந்துவிட்டது. ஆனால், ஒரு புதுமுட்டுக்கட்டை தோன்றியுள்ளது. தென்கோறிய குடியரசுத்தலைவர் டக்றர் றீ அவர்கள் போர்நிறுத்தத்துக்கு இசையமாட்டேனென்று அறிவித்தார். தங்கள்நாடு துண்டுபட்டது; மீண்டும் ஐக்கியப்படுதல் அவசியம்; அமெரிக்கர் வெளியேறினால் சீனர்கள் தங்கள்நாட்டினை ஆக்கிரமிக்கக் கூடுமென்று ஆட்சேபித்தார். இதற்குச்சமாதானங்கூறி அமெரிக்க ஜனாதிபதி தென்கோறியாவைப் பாதுகாப்பதாக உறுதிமொழி கொடுத்து ஒரு உடன்படிக்கையும் செய்துகொள்வதாக வாக்களித்தார். இத்தோடு திருப்தியடையாமல் டக்றர் றீ தமது பார்வையிலிருந்த வடகோறிய கைதிகளிலே கம்யூனிஸ்த விரோதிகளான 25,000 பேரை விடுதலைசெய்ததுமன்றி அவர்களைப் பாதுகாத்தும் வருகிறார். அதனால் வடகோறியரும், சீனரும் போர் நிறுத்தப் பேச்சை மீண்டும் முறித்து விடுவரோவென்றபயம் ஏற்பட்டது.

கோறியாவிலே போர்நிறுத்தம் ஏற்பட்டாலும் நிரந்தரசமாதானம் உடனேபிறந்துவிடாது. கோறியாவின்கதி பலபிரச்சினைகளில் ஒன்று. போர்மோசா தீவு ஒரு முட்டுக்கட்டை — செஞ்சீனாவுக்கு ஐக்கிய நாடுகளின்ஸ்தாபனத்திலே இடமளிப்பதில்லையென்று ஜனாதிபதி ஐஸன்ஹாவர்கூடப் பிடிவாதம் பண்ணுகிறார். இதொரு முட்டுக்கட்டை. இந்தோ சீனாவில சீனர்கள் மறைமுகமாகப் பிரான்சிய படைகளை எதிர்த்து வருவது இறுதி முட்டுக்கட்டையாகும்.

இந்தோசீனாவின் நிலைமையிலே நெருக்கடி அதிகரித்துவருகிறது. கம்போடிய மன்னர் பிரான்சிய அரசினரோடு கோபித்துக்கொண்டு, முழுச் சுதந்தரம்கோரித் தமது நாட்டைவிட்டு வெளியேறினார். பிரான்சிய அரசினருக்கும் இப்போரை முடிக்கப் பலம் போதாது. நிறுத்தவும் மனமில்லை.



சதாசகாய மாதாவின் **கோணம்**

## கார்மேல்மாதாவின்

# உத்தரியம்

நாம்வசிக்கும் இக்காலத்தைப் பலர் லோகாயத யுகம்என்று சொல்வர். நாலாபக்கமும் பாவச்சமயங்கள் எங்களைச் சுற்றிவளைக்கின்றன. மரணத்தின் பயமும், மரணத்தின்பின் நரகநெருப்பிலே நித்தியமும் அவியநேருமோஎன்ற பயமும் எத்தனையோபேரை வாட்டிவதக்குகின்றது. இவ்விதநிலைமையில் "இந்த உத்தரியத்தைத் தரித்துக்கொண்டு யாரொருவர் மரித்தாலும் நித்தியநெருப்புக்குப் பாத்திரமாகார்" என்று தேவதாயார் 1251-ம் ஆண்டு ஆடிமாதம் 16-ந்திகதி அர்ச். சீமோன் ஸ்ரொக்குக்குச் சொன்னவார்த்தைகள் எங்களுக்கு எவ்வளவு ஆறுதலும், தேறுதலுமானவை.

மரியாயின் அன்பையும், அடைக்கலத்தையும் காட்டும் இந்த அடையாளத்தைப்பற்றி — கார்மேல்உத்தரியத்தைப்பற்றி அர்ச். சீமோன் தமது சபைச்சந்நியாசிகளுக்கும், பிறருக்கும் தெரிவிக்கவே, இந்தப்பத்தி ஐரோப்பா முழுவதும் பரம்பியது. கத்தோலிக்க திருச்சபையின் பத்தி முயற்சிகளில் கார்மேல்மாதாவின் உத்தரியத்தை அணிதல் விசேஷஒருபத்தியாக அனுசரிக்கப்பட்டுவந்தது. உலகத்தின் எல்லாப்பாகங்களிலும் கிறீஸ்துவர்கள்— தாழ்ந்தோர் உயர்ந்தோர்என்ற பேதமின்றி—இராசா, குடியானவன்என்ற வித்தியாசமில்லாமல்—கற்றோர் கல்லாதோர்என்ற வேற்றுப்பிரிப்பில்லாமல் இந்தஉத்தரியத்தை ஆசையாவலோடுபெற்றுப் பத்திசிரவணத்துடன் அணிந்துவந்தார்கள். பரிசுத்த பாப்புமார் அநேகபலன்களை அளித்து இந்தப்பத்தியைக் கண்ணியப்படுத்தியுள்ளார்கள். அநேக இராசாக்களும், இராசாத்திகளும் தங்கள் இராசரீக பட்டாடைகளின்மேல் இந்தஉத்தரியத்தைப் பகிரங்கமாக அணிந்தார்கள் என்றால் அதன்மட்டில் அவர்கள் கொண்டிருந்த பத்திவணக்கத்தைப் பற்றிச் சொல்லவும்வேண்டுமா?


இந்தப்பத்தியனுசாரம் எண்ணிறந்த புதுமைகளுக்குக் காலாயிருந்தது. அதனால் பலர்அடைந்த ஆத்தும, சரீர நன்மைகளுக்கோ அளவில்லை. தங்கள் பாவங்களில் மூர்க்கமாய் நிலைகொண்டவர்கள் முற்றாய் மனந்திரும்பினார்கள். வெதுவெதுப்புள்ளோர் பத்திச் சுறுசுறுப்படைந்தார்கள். நோயாளிகள் பூரணசுகமடைந்தார்கள். மரணஅபாயத்தில் இருந்தோர் அற்புதமாகக் காப்பாற்றப்பட்டார்கள். தமக்குஉகப்பான இந்தப்பத்திமுயற்சியைப் பிரமாணிக்கமாக அனுசரிப்பார்மட்டில் தேவதாயார் மிக்ககரிசனையும், அன்பும் காட்டலானார்என்பது வெளிப்படை.

அளப்பரியநன்மைகளை அடைவதற்கேதுவாகிய இப்பத்தி முயற்சியோ மிக்கஇலேசானது. கார்மேல்உத்தரியத்தை நாங்கள்பெற்று அணிவதற்கு நாம்செய்யவேண்டியது என்ன? அங்கீகரிக்கப்பட்ட குருவானவரிடமிருந்து அதைப்பெறுவது. கூட்டத்து இடாப்பில் பெயரைப் பதிவித்துக்கொள்வது. பெற்ற உத்தரியத்தை எப்போதும் அணிந்துகொள்வது. அவ்வளவும் தான் வெளிக்கிரியை. ஆனால், இதன் உட்கருத்தையும், நோக்கத்தையும் நாங்கள் மறந்துவிடல்ஆகாது. "தங்கள் மரணத்தறுவாயில் தேவதாயார் தங்களுக்கு உதவிசெய்யவேண்டுமென விரும்புவோர், தங்களுடைய சீவியத்தில் பாவத்தைவிலக்கி, அவளை மகிமைப்படுத்துவதற்குப் பிரயாசப்பட்டால்மாத்திரம் இந்தவிசேஷ சகாயத்துக்கு உரித்துடையோர்ஆவர்" என்று 11-ம் பத்திநாத பாப்பானவர் துலாம்பரமாகக்கூறியிருக்கிறார். எனவே, இப்பத்தியானது, நாம் பாவவழியில் நடப்பதற்கு ஒரு உத்தரவுச்சீட்டு அல்லஎன்று மனதில்நல்லாய்ப் பதித்துக்கொள்ளவேண்டும். நாம் தேவதாயாரை நேசிக்கிறோம்; அவளோடு எப்போதும் ஒன்றித்திருக்கிறோம்; அவளையும், அவளுடைய பிரியகுமாரனையும் நேசித்துச்சேவிக்க ஆசிக்கிறோம் என்பதற்கு ஒருதூண்டுகோலாக இருக்கவேண்டியது.

எங்கள்நாளாந்த துன்பதுரிதங்களில், பாவச்சோதனை வேளைகளில், நாம் அவளுடைய திருஉத்தரியமாகிய போர்வையுள் இருக்கிறோமென்பதை மறந்துபோகக்கூடாது. மரியாயின் பிள்ளைகள்என்று உண்மையில் விசுவசித்துச் சீவிப்போமென்றால்— அவளுக்குஉகப்பாகப் புண்ணியசீவியத்தில் ஒழுகுவோமென்றால், எங்கள்மரணவேளையிலே அந்தநல்லதாயார் எங்களுக்கு உதவியாயிருந்து எங்களை நித்தியநரகத்திலும், அக்கினியிலுமிருந்து காப்பாற்றுவாளென்பதற்குச் சந்தேகமேயில்லை. இதுதான் கார்மேல்மாதாவின் திருஉத்தரியத்தின் இரகசியமென்க.

சிலோன்
இன்ஷூரன்ஸ் கம்பெனி லிமிட்டெட்

இலங்கையரின் முதலாவது
இன்ஷூரன்ஸ் கம்பெனி
முதன்மையாகவே இன்னும் விளங்குகிறது.
* * *
ஒவ்வொரு தேவையையும் பூர்த்தி
செய்யக்கூடிய பொலிஸி!
ஒவ்வொருவரின் தேவைக்கும் தகுந்ததான
பொலிஸி!



தலைமை ஆபீஸ்: 69, ராணி வீதி, கொழும்பு
டெலிபோன்: 6241, 6242, 6243.

கிளைகள்:

| | | | |
|---|---|---|---|
| காலி | அம்பலாந்தோட்டை | | மட்டக்களப்பு |
| கண்டி | யாழ்ப்பாணம் | | சிலாபம் |
| களுத்துறை | நீர்கொழும்பு | | நுவரேலியா |
| மாத்தறை | பதுளை | ரத்னபுரி | குருணாகலை |

மொத்த மூலதனம் 75 லட்சம் ரூபா
தி சிலோன் இன்ஷூரன்ஸ்
கம்பெனி லிமிட்.
கீழ்க்கண்ட இன்ஷூரன்கள் இயற்றப்படும்:
ஆயுள், தீ, மோட்டார், பொதுநஷ்டஈடு,
கப்பல்சேதம் முதலியன
சேவையின்மூலம் பாதுகாப்பளிப்பது.

## Junior School Certificate Examination November, 1953.

(Conducted by the Examination Council of the Northern Province Teachers' Association.)

Closing date for entries of School Candidates:- **25th Sept. '53.**

Closing date for entries of Private Candidates:- **1st August '53.**

Apply for entry forms to:—

T. Seenivasagam,
Secretary,
N.P.T.A. Examination Council,
23, Kannathiddy Road, Jaffna.

The Executive Council of the N. P. T. A. has decided to conduct the J. S. C. Examination in and after 1954. The Examination Council for 1953—1954 was elected with the following office-bearers:-

President:- Mr. A. W. Rajasekaram, Principal, Christian College, Kopay.

Secretary:- Mr. T. Seenivasagam, R. K. M. Vaidyeshwara Vidyalaya, Jaffna.

Asst. Secretary:- Mr. A. R. Rajanayagam, Hindu College, Kokkuvil.

Principals and others interested are requested to forward suggestions re syllabus and text books for 1954 Exam. before 20-7-53.

Printed and Published for the Proprietor by NICHOLAS JAMES, residing at No. 20, Fifth Cross Street, Jaffna, at St. Joseph's Catholic Press, Catholic Mission Premises, Main Street, Jaffna, on Thursday, July 9-1953